www.tamilarangam.net

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

ஐப்பசி 1999 | இதழ் 7

"...ஒவ்வொரு ஒக்டோபர் மாசமும் கடந்து போறப்ப நாம பட்ட கஷ்டங்கள நெனச்சி கண்ணால தண்ணி வழியும். நாம பொறந்த மண்ண நெனச்சி மனசு ஏங்கும்"

*- மன்னார் முஸ்லிம் பெண் -*

# சிங்கள மக்கள் படுகொலை!

பெண்களும் குழந்தைகளும் அடங்கலாக 62 சிங்கள மக்கள் அம்பாறை மாவட்டத்தில் செப்ரெம்பர் மாதம் 19ம் திகதி மிகக்கொடூரமான முறையில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெட்டிக் கொல்லப்பட்டனர். மக்கள் என்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாவர். சிங்கள பொது மக்களைப் படுகொலை செய்வதானது என்றுமே போராட்டம் சார் நடவடிக்கையாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் பெயரால் சக தேசத்தை சார்ந்த மக்களை அழித்தொழிப்பதானது தமிழ் மக்களின் விடுதலைக்கு எதுவித நன்மையையும் ஏற்படுத்தப் போவதில்லை. மாறாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தார்மீக நியாயத்தை கேள்விக்குள்ளாக்குவதாகவே இத்தகைய குரூர நடவடிக்கைகள் அமைகின்றன. இவை எமது போராட்டத்தில் மாறா வடுக்களாக நிலைத்திருக்கப் போகும் அரசியல் தவறுகளாகும்.

சிங்கள சோவுனிச அரசின் சித்தாந்த மேலாதிக்கத்திற்குள்ளாகி தம்மளவில் சோவுனிசத்தை பாதுகாத்து வருவதன் மூலம் சிங்கள அரசின் பேரினவாதத்திற்கு வெகுஜன அடித்தளத்தை வழங்குபவர்களாக சிங்கள மக்கள் இருப்பினும் சிங்கள வெகுஜனங்கள் ஒப்பீட்டளவில் அதிகாரங்கள் ஏதுமற்றவர்களே. அரசே அனைத்து அதிகாரங்களையும் வன்முறை இயந்திரத்தையும் தன்னகத்தே கொண்டிருப்பதன் மூலம் நம் மீதான இனப்படுகொலையை மேற்கொண்டு வருகிறது. நமது தாக்குதல் இலக்கு சிங்கள அரசேயன்றி ஒருபோதும் சிங்கள மக்களாயிருக்க முடியாது. அதிகாரம்மிக்க அரசுக்கும் அதிகாரங்களற்ற பரந்துபட்ட சிங்கள மக்களுக்குமிடையில் பாரிய முரண்பாடுகள் நிலவுகின்றன. சிங்கள பொதுமக்களின் அடிப்படை உரிமைகளையெல்லாம் அத்துமீறியபடிதான் இன்றைய சிங்கள பேரினவாத - தரகு முதலாளித்துவ அரசு தனது சர்வாதிகார ஆட்சியை பாதுகாத்து வருகிறது. சிங்கள மக்கள் மத்தியில் போராட்டங்கள் வெடிக்கும் போதெல்லாம் தனது வன்முறை இயந்திரத்தால் தனது சொந்த மக்களையே காட்டுமிராண்டித் தனமாக நசுக்குகிறது. தேவைப்படின் அழித்தொழிக்கிறது. தம்மையே அடக்கும் ஒரு அரச இயந்திரத்தை தமது தேசத்தின் பிரதிநிதியாகக் கொண்டிருக்கும் சிங்கள மக்கள், நீண்டகாலத்தில் தாமாகவே இவ்வரச இயந்திரத்தைத் தகர்த்தெறிவர். இவ்வகையில் சிங்கள மக்கள் தமிழீழ விடுதலையின் சேமிப்பு சக்தியாவர். சிங்கள அரசுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான முரண்பாடு கூர்மையடையும் போதெல்லாம் அதை ஊக்குவித்து சிங்கள மக்களின் நட்பை தமிழ் தேசத்திற்குக் கிடைக்கச்செய்வது நமது வெற்றிகரமான அரசியலிலேயே தங்கியுள்ளது. யுத்தத்தை நிறுத்தும்படி சிங்கள மக்கள் அரசை நிர்ப்பந்தித்தால், சிங்கள இளைஞர்கள் படையில் சேர மறுத்தால், தமிழருக்கு சுயநிர்ணய உரிமை வழங்கும்படி சிங்கள மக்கள் வாக்களித்தால் அதையும் மீறி ஆக்கிரமிப்பு யுத்தத்தை எவ்வளவு காலத்திற்கு அரசால் தொடர முடியும்? சிங்கள மக்களின் ஒத்துழைப்பு என்பது தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் வெற்றிக்கு நீண்ட காலத்தில் தேவையான ஒன்றாகும்.

அதற்கு மாறாக, அரசின் அட்டூழியங்களுக்கெல்லாம் அதிகாரமெதுவுமில்லாத

(தொடர்ச்சி 2இல்)

## 2000 வருடம்: போராண்டாக சிங்கள அரசு பிரகடனம்!

எதிர்வரும் ஆண்டுக்கான யுத்தச் செலவாக சிறிலங்கா அரசு 5243 கோடி ரூபாய்களை (52,434,270,000) ஒதுக்கியுள்ளது. ஆக 2000ம் ஆண்டு என்பது ஒரு யுத்த ஆண்டு என சிங்கள அரசு இதன் மூலம் பிரகடனம் செய்துள்ளது. சமீபத்தில் பொ.ஐ.மு. அரசாங்கம் தனது ஐந்தாண்டு நிறைவை கொண்டாடிய போது சிறிலங்காவின் ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சரும், முப்படைகளின் தலைவருமான சந்திரிகா அம்மையார் "2000 ஆண்டுக்கான திட்டம்" என்ற ஒன்றை வெளியிட்டிருந்தார். 2000 ஆண்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்றும் இலங்கை மிகவும் அமைதியான ஒரு நாடாக ஆகிவிடும் என்றும் அத் திட்டத்தில் கூறப்பட்டிருந்தது. இவ்வாறு கூறி மூன்றே மாதங்களில் யுத்தத்துக்கு 5243 கோடிகளை ஒதுக்கியுள்ளதானது அம்மையாரின் "2000 ஆண்டுக்கான திட்டம்" இனச்சுத்திகரிப்பு திட்டமென்றே பறைசாற்றியிருக்கிறது.

அரசு இனச் சுத்திகரிப்பு யுத்தத்தில் காட்டிவரும் ஆர்வத்தையும் துரிதத்தையுமே புலப்படுத்துகிறது. 1999க்கான யுத்தத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகை 4700 கோடிகள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. 2000ம் ஆண்டிற்கென ஏறத்தாழ 500 கோடி ரூபாய்களால் யுத்த பட்ஜட் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இது 11.7 வீத அதிகரிப்பு என்பது கவனிக்கத்தக்கது. எனவே அடுத்துவரும் 2000ம் ஆண்டு என்பது தமிழீழ மக்களுக்கு இன்னும் பெரும் அழிவுகளை ஏற்படுத்தப் போவதையே இது புலப்படுத்தி நிற்கிறது.

அடுத்த ஆண்டு சிங்கள அரசின் திட்டமிட்ட இன அழிப்பு யுத்தத்துக்கு இவ்வளவு தொகையை ஒதுக்கி மேலும் கடுமையான யுத்தச் சுமையை ஏற்படுத்தி, உடலியல், உளவியல் பாதிப்புகளை சுமத்தி, நிர்க்கதி நிலைக்கு ஆளாக்கி தமிழ் மக்களை சரணடையச் செய்யும் கைங்கரியமே இது.

போராட்டம் மக்கள் போராட்டமாக வடிவமெடுக்க வேண்டியதன் அவசியத்தையே இந்த நிலைமைகள் உறுதியாக தெளிவுறுத்துகின்றன என்பதை உணர்வோம். ★

## இந்தியா: மக்கள் வாக்கு மதவெறிக்கா?

இந்து மதவெறி பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமையிலான கூட்டணி மீண்டும் இந்தியாவில் அரசமைக்கப் போகிறது. நடந்து முடிந்த இந்தியத் தேர்தலில் தேசிய ஜனநாயக் கூட்டணி அறுதிப் பெரும்பான்மை பெற்று அரசமைக்கின்றது. இதில், பாரதீய ஜனதாக் கட்சி என்பது நமது பிராந்திய அரசியலில் பார்ப்பனிய - இந்து மதவெறி ஆதிக்கம் புரியப் போகும் அச்சுறுத்தலையே சுட்டிநிற்கிறது.

இத்தேர்தலானது வெளியுலகுக்குக் காட்டப்பட்டது போன்று அனைத்து விதத்திலும், சுமுகமாக நடைபெற்றுவிடவில்லை. தலித், மற்றும் சிறுபான்மையின மக்கள் மற்றும் விளிம்பு நிலை மக்கள் பிரிவினர் மீது காட்டு மிராண்டித் தனமான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டபடிதான் அதிகாரப்பிரிவினரின் நலன்களைத் தீர்மானிக்கும் இத்தேர்தல் நடந்தேறியது. சாதியின் பெயரால் அடக்கப்பட்ட தலித் மக்களை வாக்களிக்கவே விடாது அவர்கள் மீது தொடர் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. முஸ்லிம் மக்களின் பொதுக் கூட்டங்கள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டன. முஸ்லிம்களின் நடமாட்டங்கள் கூட கண்காணிப்புக்கு உள்ளாகின. அவ்வகையில் இத்தேர்தல் மக்களின் முழுமையான பங்குபற்றலுடன் நடந்த தேர்தலல்ல.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே திட்டங்கள் வைத்திருக்கும் 'காங்கிரஸ்' கூட்டு ஆட்சிக்கு வராதது ஈழத்தமிழருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் சாதகமானதென்பது நம்மவர் சிலரின் அரசியல் பார்வையாயுள்ளது. பா.ஜ.க.வின் அரசினால் எமக்கு ஏற்படும் தற்காலிக சாதக அம்சங்களை மட்டும் கணக்கில் கொள்ளாது, இவ்வரசின் நீண்டகாலத் திட்டங்களையும் மற்றும் எமது அனுபவங்களையும் நாம் மறந்து விடுவது நல்லதல்ல.

காங்கிரஸ் ஆட்சியமைத்தால் ஈழத் தமிழரை பழிவாங்கும், அதனால் பி.ஜே.பி. தான் ஆட்சியமைக்க வேண்டுமென நினைப்பது பூவும் தலையுமென இருபக்கங்களைக்கொண்ட ஒரு நாணயத்தில் நமக்கு

(தொடர்ச்சி 3இல்)

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிங்களமக்கள். ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளிம்புநிலையில் வாழும் சிங்களப் பொதுமக்களை படுகொலை செய்வது தமிழீழ விடுதலைக்கு ஆதரவான சிங்களவர்களைக் கூட அரசின் பக்கம் தள்ளிவிடும் செயலாகும்.

தமிழ் மக்கள் மீதான தனது இன அழிப்பு நடவடிக்கையை மூடி மறைத்துக் கொண்டு, தமிழ் போராட்டத் தரப்பினரால் கடந்த காலத்தில் சிங்கள மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை புகைப்படமெடுத்து உலக நாடுகளெங்கும் சென்றுபிரச்சாரப்படுத்தி தனது ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு ஆதரவு தேடி வந்த சிங்கள அரசுக்கு இந்த சம்பவம் மிகவும் சாதகமானதொன்றாக அமைந்துள்ளது. சிங்கள மக்களின் முன்னிலையில் முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டு தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு சர்வதேச ஆதரவைத் திரட்டிக்கொள்ள அது இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்தரிப்பதிலும் போராட்ட சக்திகளைத் தனிமைப்படுத்துவதிலும் சிறிலங்கா அரசு அரசியல் ரீதியான வெற்றியைப் பெற்றிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் சிங்கள மக்களை தமிழ் போராட்ட சக்திகள் படுகொலை செய்வதானது, தமிழர் தேச விடுதலைப் போராட்டத்தை மனித விரோத குழுக்களின் பயங்கரவாத நடவடிக்கையாக சர்வதேச உலகின் முன் குறுக்கும், எமது போராட்டத்தின் நியாயத்தன்மையை இழக்கச்செய்யும் நடவடிக்கையாகும். அதுமாத்திரமின்றி விடுதலைப் போராட்டங்கள்பால் கரிசனை கொண்டிருக்கும் புரட்சிகர, ஜனநாயக, முற்போக்கு பிரிவினரின் ஒருமைப்பாட்டையும் இத்தகைய மனித விரோத நடவடிக்கையினால் இழக்க நேர்ந்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளால் சிங்கள மக்கள் படுகொலை செய்யப்படுவதானது தமிழீழ விடுதலைப் போராட்ட அரசியலை கோழைத்தனத்தின் அரசியலாக உலகின் முன் தலைகுனிவுக்குள்ளாக்குவதாகும். இதன் மறுபுறம் சிங்கள அரசும் பேரினவாத சக்திகளும், அமெரிக்க ஏகாதிபத்தியமும் தமது வெற்றியை அறுவடை செய்து கொள்கின்றனர்.

பி.பி.சி. தமிழ்ச் சேவை மற்றும் தமிழக செய்திப் பத்திரிகைகள் சிங்கள அரசின் விமானக் குண்டுத்தாக்குதலால், 22 தமிழர்கள் கொல்லப்பட்டும் 45 பேர் மோசமாக காயப்படுத்தப்பட்டதற்கும் பழி வாங்கும் செயலாக சிங்கள மக்கள் கொல்லப்பட்டதாக ஒரு நியாயப்படுத்தலை செய்ய முனைந்தன. வெளித்தோற்றத்திற்கு நமக்கு ஒரு ஆறுதலையும் திருப்தியையும் தருவது போல இந்த வகை வெளிப்பாடுகள் நமக்கு தோன்றுகின்றன. ஆனால் இது தமிழீழ விடுதலைக்கு நீண்டகாலத்தில் மிக மோசமாக கேடுவிளைவிக்கும் ஒரு ஆபத்தான போக்காகும். ஈழத்தமிழர் மத்தியில் போராட்ட உணர்வை ஏற்படுத்துவதற்கு பதிலாக ஒருவகை பழிவாங்கும் உணர்வினை வளர்த்து அதில் நிறைவு காண வைக்கும் போக்காக இதுவுள்ளது. இந்த விதமான ஆதரவுக்கருத்துக்கள் மக்களை போராட்டதில் தொடர்ந்தும் பார்வையாளர்களாக வைத்திருக்கவும் மற்ற மக்களின் அழிவிலும் துன்பங்களிலும் தம்மை திருப்தி கொள்ளும் நிலைக்கு கொண்டு செல்வதுமாகும். தமிழீழ விடுதலை போராட்டத்தை புரட்சிகரமான திசை வழியில் செல்லவிடாது காலகாலத்திற்கும் குழிதோண்டி புதைக்கும் ஒரு அபாயகரமான முயற்சியாகவே இதுவுள்ளது. திட்டவட்டமான ஒரு பயங்கரவாத செயலுக்கு போராட்ட முலாமிடும் முயற்சிகளையிட்டு நாம் மிகுந்த எச்சரியாக இருக்க வேண்டும்.

சிங்கள படையினால் திட்டமிட்டு குண்டு வீசி கொல்லப்பட்ட நமது மக்களுக்காக இரங்குவதும், உத்வேகமுடன் போராடுவதும், அல்லது போராட்டத்திற்கு பல்வேறு பங்களிப்புகளை நல்குவதும் வேறு. சிங்களப் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு நியாயம் கற்பிப்பது வேறு, அதனை இட்டு களிப்படைவது வேறு. மேற்படி சித்தரிப்புகள் போராளிகளையும் தமிழ் மக்களையும் இப்படியான செயல்களுக்கு தூண்டிவிடும் உள்நோக்கம் கொண்டவையாகும். மீண்டும் இது எதிரிகளைத்தான் பலப்படுத்தும். போராட்டத்தை பலவீனப்படுத்தும்.

சிங்கள அரசு மீண்டும் பல குண்டுத் தாக்குதல்களை திட்டமிட்டு தமிழ் மக்கள் மீது நடாத்த போகின்றது என வைத்துக் கொள்வோம். இவ்வாறான பழிவாங்கல் படுகொலைகளால் அவற்றை தடுத்து நிறுத்திவிட முடியுமா? ஈற்றில் இது எங்கு சென்று முடிவடையப்போகின்றது? இதனால் உண்மையாக பயனடைபவர்கள் யார்? இதுவரை காலமும் பயனடைந்தது யார்? எதிரி அரசின் வழிமுறைக்கும் நமது வழிமுறைக்கும் என்னதான் வேறுபாடு? எதிரிகளின் வழிமுறைக்கும் எமது போராட்ட வழிமுறைக்கும் இடையில் தெளிவாக எல்லைக்கோடு இருக்க வேண்டாமா? கிழக்கு தீமோர் இதற்கு தெளிவான உதாரணமாக அமையவில்லையா? அங்கு விடுதலைக்காக போராடும் புரட்சிகர அமைப்பினர் எவ்வளவு தெளிவாகவும் உறுதியுடனும் சொல்லுகின்றார்கள், "நாம் இந்தோனேசிய அரசுக்கும் படைகளுக்குமே எதிரானவர்கள். சாதாரண இந்தோனேசிய குடிமக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. அவர்களுக்கு எதிராக இதுவரை எந்தவிதமான அழிவையும் ஏற்படுத்த வில்லை. ஏற்படுத்தவும் மாட்டோம்" எனத் தெளிவாகத் தெரிவித்துள்ளனர்.

மற்ற நேரங்களில் எமது போராட்டத்திற்கு எதிராக செயற்படும், அல்லது ஆதரவாக செயற்படாத இப்படிப்பட்ட தொடர்புசாதனங்களும் நபர்களும் சிங்கள மக்கள் கொலைக்கு எமக்கு சார்பாக தரும் போலி நியாயங்களையும் அனுதாபங்களையும் குறித்து நாம் எச்சரிக்கையாக இருப்போம். தமிழர் கொல்லப்படுதவற்கு மட்டுமல்ல. சிங்கள மக்கள் கொல்லப்படுதவற்கும் எமது எதிர்ப்புகளைக் காட்டுவோம். நபர்களாக மட்டுமல்ல, தாபனமாக மட்டுமல்ல, ஒட்டு மொத்த தமிழ் தேசமாகவும் நாம் இந்த கொடூரங்களைக் கண்டிக்க வேண்டும். தேசத்தின் நீண்டகால நலன் கருதி ஒன்று திரண்டு எதிர்த்துப் போராட வேண்டும். எமது உண்மையான போராட்டத்திற்கும் இத்தகைய கொடூரங்களுக்கும் இடையிலான தெளிவான வேறுபாட்டை நாம் பல வடிவங்களிலும் வேறுபடுத்திக் காட்ட வேண்டும்.

"தேசியவாதம் ஆபத்தானது, அது அழிவிற்குத்தான் வழிகோலும், அதற்கு முற்போக்கான ஒரு முகம் இருந்தாலும் ஈற்றில் ஆதிக்கம் செலுத்துவது அதன் குரூர முகம்தான்" என்ற வாதம் தற்போது பலமாக ஆட்சி செலுத்தும் சூழலில் அந்த கருத்தாக்கத்தை நிரூபிப்பதாகவே இப்படியான படுகொலைகள் எடுத்துக்கொள்ளப்படும். எனவே இப்படியான படுகொலைகளை ஆதரிப்பது மட்டுமல்ல, மௌனமாக அங்கீகரிப்பதும் ஆபத்தானதாகும். ஏற்கனவே பல கறைகள் நமது போராட்டத்தின் மீது எதிரிகளால் திட்டமிட்ட முறையில் பூசப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றிற்கு போராட்ட சக்திகள் பொறுப்பேற்கவும், அவற்றை சுயவிமர்சனமாக ஏற்றுக் கொண்டு போராட்டத்தை முன்தள்ளவும் வேண்டியுள்ளது. இப்படியிருக்கையில் இன்னமும் நமது போராட்டம் கறைபட நாம் அனுமதிப்பது நீண்ட காலத்தில் தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

எதிரிகளின் அடக்குமுறைகளில் இருந்தும் தேசத்தின் அக அடக்குமுறைகளில் இருந்தும் மக்களை விடுவிக்க போராடும் எந்தவொரு சக்தியும் இப்படியான படுகொலைகளை ஒரு வழிமுறையாக கொள்ளக்கூடாது. செய்திருக்கவும் கூடாது. அப்படி செய்பவர்களை மக்களுக்காகவும், அதன் உண்மையான அர்த்தத்தில் தேசவிடுதலைக்காகவும் போராடுபவர்களாக நாம் கருத முடியாது. இப்படியான செயல்கள் எமது தரப்பினால் இழைக்கப்படுமாயின் இது தேசவிடுதலையின் பேரில் இழைப்படும் கடைக்கோடி பிற்போக்குத்தனமாகும். இவற்றை நாம் கண்டிக்க வேண்டும். தேசமாக ஒன்று திரண்டு தடுத்து நிறுத்த நீண்ட தயாரிப்புகள் செய்ய வேண்டும்.

எமது கட்சியின் அரசியல் திட்டத்தில், சிறிலங்காவின் சிங்கள மக்கள் பற்றியும் தமிழீழத்தில் வாழும் சிங்கள மக்களைப் பற்றியும் தெளிவாகவே எமது நிலைப்பாடுகளை முன்வைத்துள்ளோம். அதில் என்றும் உறுதியாக நிற்போம். எம்மை உணர்ச்சி வசப்படுத்தும் நிகழ்வுகளுக்காக நாம் அடிப்படை மனித விழுமியங்களை விலையாக கொடுக்க கூடாது. சக தேச மக்கள் மீதான படுகொலைகளை நியாயப்படுத்துவோமானால் அதன் விளைவுகளை நாம்தான் அறுவடை செய்ய நேரிடும். சொந்த மக்கள் மீதான படுகொலைகளும் இவ்வாறே நியாயப்படுத்தப்படும் என்பதில் எச்சரிக்கை கொள்வோம். ★

## பொ.ஐ.மு. ...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலமைகளின் ஆதரவை சிங்கள அரசுத் தலைவர்கள் பெற்றுக்கொண்டனர் 1950களில் சிங்களம் மட்டும் அரச கரும மொழித்திட்டத்திற்கு எதிராக தமிழ், முஸ்லிம் மக்கள் கொதித்தெழுந்தனர். தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இப்போக்கின் அரசியல் ஆபத்தை சரியான இனங்கண்டு கொண்ட சிங்கள தலமை, விரைந்து செயற்பட்டு அன்றைய முஸ்லிம் தலமைக்கு பல சலுகைகளை தந்து தமிழ் தலைமைகளை மோதலுக்கு தூண்டி, வரலாற்று முக்கியத்துவம் மிக்க தமிழ் முஸ்லிம் ஒற்றுமையை தகர்த்தனர்.

அதன்பின்பும் தொடர்ச்சியாக அடக்குமுறைகள் பலவடிவங்கள் பெற்றன. மொழி உரிமை பறிப்பு திட்டமிட்ட குடியேற்றங்கள் வேலைவாய்ப்புகள், உள்ளகக்கட்டுமானங்கள் என பல தளங்களில் அடக்குமுறைகள் விரிவடைந்து சென்றன அப்போதெல்லாம் இந்த அடக்குமுறைகளை இவ்விரு சமூகங்களும் இணைந்து, தனித்தனியாக எதிர்த்து நிற்கும் போது சிங்கள அரசுத் தலைமை மிகவும் கவனமாக செயற்பட்டும் முஸ்லிம் தலைமைக்கு சலுகைகள் தந்து விலைக்கு வாங்கிக் கொண்டன.

தமிழ்த் தலைமைகளிலும் ஒரு பகுதியினருக்கு சலுகை அளித்து தன் பக்கம் வென்று கொண்டனர். தமிழ்த் தலைமையோ எதிரியின் உத்தியை இனங்கண்காணாது, தமது வெறுப்பையும் காழ்ப்பையும் முஸ்லிம் சமூகத்தை நோக்கித்திருப்பின. விளைவு, அடக்கப்படும் இரண்டு சமூகங்களும் ஒன்றையொன்று பகையுடன் நோக்கத் தொடங்கின. எதிரிக்கோ எதிர்பார்த்த வெற்றி இலகுவாகக்கிட்டியது.

நிஜமான சிங்கள இனவாத எதிரியை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தி அடக்கப்படும் இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான ஒற்றுமையை பலப்படுத்துவதற்கு பதிலாக தமிழ்த்தலைமைகளால் ஆழமான காழ்ப்புகளும் தப்பெண்ணங்களும் விதைக்கப்படட்டு, ஊக்குவிக்கப்பட்டன. சிங்கள இனவாத தலைமையின் சதிகளுக்கு உடந்தையாக நேரடியாகவும் மறைமுகமாகவும் இவ்விரு சமூகங்களின் பிற்போக்கு அரசியல்தலமைகளும் தொடர்ந்து செயற்பட்டு வந்தன இது வரலாறு.

இன்றுவரையிலும் இந்த அரசியல் அவல வரலாறு நீடித்தே வருகின்றது. இதிலிருந்து மீண்டு புதுப்பரிமாணத்துடன் சரியான திசை கண்டறியப்பட இந்த இடைக்காலத்தில் உண்மையான எத்தனிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக நமது போராட்டத்தரப்புகளினால். மாறாக இன்றும் இந்த இனவாத அரசாலும் அதன் கூறுகளையும் போட்டி போட்டுக் கொண்டு, அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டுவரும் சமூகங்களின் பிரிதிநிதிகள் என தம்மை சொல்லிக் கொள்வோர் காப்பாற்ற முனைவது அவலத்திலும் அவலமாக உள்ளது.

பொ.ஐ.மு. அரசாங்கம் கவிழ்கப்படமாட்டாது தற்செயலாக அப்படித்தான் நடந்து விட்டாலும் அது காப்பாற்றப்பட்டு விடும். ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மொழியுரிமை: புதிய ஏமாற்றுத் திட்டம்!

"இலங்கையிலுள்ள அனைத்து சிங்களமொழி மூல பாடசாலைகளிலும் தமிழ் மொழியை கற்பிக்க வேண்டும் . அதேபோல தமிழ் மொழி மூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியை கற்பிக்க வேண்டும்" என சிங்கள அரசு உத்தரவிட்டுள்ளது. இதனை அனைத்து கட்சிகளும் வழமைபோல் வரவேற்றுள்ளன.

உண்மையில் நடைபெறப்போவது என்ன என்பது எமது கடந்த கால அனுபவங்களில் தாராளமாகவேக் காணக்கிடக்கிறது. மிகவும் அண்மைக்காலத்தில் அரசினால்தயாரித்து நடைமுறைக்கு வந்த பாடத்திட்டங்களில் வரலாறு எப்படி திரிக்கப்பட்டதென்பதும். இதற்கெதிராக தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் போராடியதும் நாம் அறிந்ததே. அரசியல் யாப்பின் 13ம் திருத்தப்படி தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்த்து என்பதை அமுலாக்க, 1988ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நாடு முழுவதும் தமிழ் மொழியை அமுலாக்குவதற்கு அதற்கான ஆணைக்குழு பட்டபாடும், ஆண்டுக்கொரு கூட்டம் நடாத்தியதுடன் அது அமுங்கி போனதும், தமிழ் மொழிபெயர்பாளர்கள் இல்லை, தமிழ் தட்டெழுத்தாளர்கள் இல்லை எனவும் இந்த கணணி யுகத்தில் காரணங்கள் கூறப்பட்டதும் அனைவரும் அறிந்ததே.

மிக மிக அவசரமாகவும் அரைகுறையாகவும் தமிழ்மொழி கற்பிக்கப்பட்ட பல சிங்கள ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி தமிழ் பாடசாலைகளை நிரப்பி சிங்கள மொழியை கற்பிப்பதும், தமிழ் மொழியை சிங்களத்தில் கற்பிக்க தெரிந்த தமிழ் ஆசிரியர்கள் இல்லை என்பதை காரணமாக காட்டி விடயம் கிடப்பில் போடப்படுவதும் நடக்கும் என்பதுதான் நிஜம். மேலும், தமிழ் மொழியை கற்றுக்கொள்ளும், அதனை நடைமுறைப்படுத்தும் மனோபாவமும் அவசியமும் சிங்கள தேசத்தில் எவ்வளவு காணப்படுகிறது என்பதும் அதற்குமாறாக எப்படிப்பட்ட மனோபாவத்தில் அவர்கள் வளர்க்கப்பட்டு, கட்டமைக்கப்பட்டு வருகின்றார்கள் என்பதும் நாமறிந்ததே. எவ்வாறாயினும் மொழி கற்பிக்கும் திட்டம், இதன் பலாபலன்களை மதிப்பிடுவது அல்ல இக்கட்டுரையின் நோக்கம்.

மொழி என்பது வெறும் ஊடகம் மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் அடிப்படை இருப்பு. ஒரு அரசின் கீழ் அமையும் பல சமூகங்களில் குறிப்பிட்ட சமூகமொன்றின் மொழியானது சம உரிமை மறுக்கப்பட்டும் அதன் பயன்பாடு வளர்ச்சி மறுக்கப்பட்டும் வரும்எனின் அதுஇறுதியில் அச்சமூகத்தின் இருப்பை பல்வேறுவடிவங்களிலும் நசுக்குவதில் சென்று முடிவடையும். அதாவது, அச்சமூகத்தின் சமூக, பொருளாதார, அரசியல் அடக்குமுறைகளில் சென்று இது முடிவடையும். நமது சூழலில் இந்த விதமாக இனஅழிப்பு என்பது 1958 தனிச்சிங்கள சட்டம் அமுலுக்கு வந்ததுடன் அதன் சூக்குமமான வடிவில் ஆரம்பிக்கப்பட்டது. சட்டத்துறை, நிபுணத்துவதுறைகள், கல்வித்துறை போன்ற பல தளங்களில் இனச்சுத்திகரிப்பு ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இவ்வளவும்பல தசாப்தமாக நடந்து முடிந்த பின்பு , இன்று பௌதிக ரீதியில் இனஅழிப்பு மிகவும் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு கட்டத்தில், தமிழ் மொழியின் அந்தஸ்த்து சிங்கள மொழியை விட அதிகமானதுஎன சட்டம்இயற்றினாலும் கூட அதில் நமது தேசத்திற்கு கிடைப்பது மிக மிக அற்பமே.

இதற்கு மிகவும் அண்மைக்கால உதாரணமாக, வாகன இலக்கங்களில் சிங்கள சிறி எழுத்து நீக்கப்பட்டதை கொள்ளலாம். 60 களில் இந்த திணிப்பையும் இதுபோன்ற மொழித்திணிப்பையும் எதிர்த்து ஈழத்தமிழர் நடாத்திய பாரிய போராட்டங்களும் அதனை நசுக்க சிங்கள அரசு தனது சிங்கள படைகளை கொண்டு தாயகத்தை ஆக்கிரமித்ததும் வரலாறு. இன்று இந்த சிங்கள சிறியை அகற்றிவிட்டதால் தமிழருக்கு என்ன அரசியல் உரிமை, என்ன மீட்சி கிடைத்து விட்டது.

இன்றைய கட்டம் தமிழ் மொழிக்கு சமஉரிமை உண்டா இல்லையா என உரசிப் பார்க்கும் கட்டமல்ல. ஒரு தேசம் தனக்கான அரசை தானே உருவாக்கிக்கொள்வதை தவிர தனது இருப்பிற்கு மாற்றுவழி கிடையாது என்பதை பலதசாப்த வரலாற்றின்பின்பு, பலவேறு விலைகளை கொடுத்த பின்பு, அவ்வாறான அரசை அமைப்பதற்காக போராடிக்கொண்டிருக்கும் காலகட்டம். **இப்போதுதான் நாற்பது வருடத்திற்கு முந்திய மொழிப்பிரச்சனை பற்றி, கிட்டத்தட்ட அதே அளவு வயதை உடைய சிங்கள அரசுத்தலைவர்கள் உணர தலைப்படுகின்றார்கள் எனின் நமது சுயநிர்ணய உரிமையை அதன் சரியான அர்த்தத்தில் புரிந்து கொள்ள இவர்களின் பேரப் பிள்ளைகளால் கூட முடியாது என்பது தான் யதார்த்தம்.**

ஒரு காலத்தில் அரசியல் வரலாற்றில் தமிழ் மொழி உரிமை என்பது தமிழ் மொழியை தாய்மொழியாக கொண்டவர்களின் அடிப்படை கோரிக்கையாக இருந்துள்ளது என்பது உண்மை. இதற்கான ஒன்றுபட்டதும் தனித்தனியானதுமான போராட்டங்களை இச்சமூகங்கள் நடாத்தியுள்ளன. பலர் சிறை சென்றுள்ளனர். உரிமைகேட்டு போராடிய மக்கள் மீது சிங்கள அரசின் ஊக்குவிப்புடன் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. அந்தளவிற்கு மொழிப்போராட்டம் என்பது அப்போது எரியும்பிரச்சனையாக இருந்தது. ஆனால் இன்று மொழி என்பது ஒரு பகுதிப்பிரச்சனையாகும். நம்மை நாமே ஆளவும் நிர்வகிக்கவும் முன்னேற்றிக் கொள்ளவுமமான இறைமை கொண்ட சுதந்திர அரசை கொண்டிருப்போம் எனின் மொழி முன்னேற்றம், அதன் பிரயோகம் என்பதெல்லாம் ஒரு சாதாரண விடயமாகி விடும். என்றைக்கோ முதன்மை பெற்றிருந்த மொழி உரிமை விடயத்திற்கு இன்று வெற்றிகரமாக தீர்வு கண்டு விட்டதாக, அதுவும் ஒரு அறிவிப்பை மட்டும் வைத்துக் கொண்டு- எதிரிகள் தரப்பு கட்சிகளும் பிரமுகர்களும் தம்மை தாமே பாராட்டிக் கொள்வதில் நமக்கு அக்கறையில்லை. இதனை தமிழ்த் தேசத்திற்கு துரோகம் செய்த தமிழ் தரப்பும் வரவேற்பது என்பது மிக மிக கேலிக்குரியதே. எதையோ விட்டுவிட்டு எதையோ பிடித்துக்கொண்டிருப்பதற்கு ஒப்பானதே. இந்த திட்டத்தை அரசு நூறு வீதம் நடைமுறைப்படுத்துவதாக வைத்துக் கொண்டாலும் கூட நமது இன்றைய தேசிய அடக்குமுறையின் பாரதுாரத்திற்கு இதனால் என்ன தீர்வு கிடைத்துவிட போகின்றது? இப்படியே மெல்ல மெல்ல பெற்றுவிடலாம் என்ற நப்பாசையா? அதுதான் சொல்லி விட்டோமே இது நான்கு தசாப்தத்திற்கு முற்பட்ட ஒரு கோரிக்கை இந்த அடக்குமுறையின் பலாபலன்களை அனைத்தையும் அவர்கள் பெற்றுக் கொண்டு, எம்மை அரசு கட்டமைப்புகளில் இருந்தும் அதிகார அமைப்புகளில இருந்தும் பல்கலை கழகங்களில் இருந்தும் களையெடுப்பு செய்துவிட்டு இப்போது அதுபற்றி பேசுவதில் நமது தேசத்திற்கு எந்தப்பயனும் கிடையாது என்று.

அவர்களது "புகழ்மிக்கதீர்வு திட்டத்தில்" இராணுவ ஆக்கிரமிப்பை பற்றியும், இன்னமும் மிக மும்முரமாக நடைபெற்று வரும் திட்டமிட்ட குடியேற்றம் பற்றியும், தமிழ்தேசம், அதன் தாயகம், சுயநிர்ணயம் போன்ற கருத்தாக்கங்கள் இப்படி எதையும் காணோம். தாம் எங்கே தொடங்கினோம் எங்கு நிற்கின்றோம் என்பதையே தமது மக்களுக்கு சிங்கள தலைமைகள் மறைத்து விட்டு இன்று வங்குரோத்தாக நிற்பதெல்லாம் தற்செயலானவை அல்ல. இனவாதம்கக்கி வருகின்ற சிங்கள அமைப்புகளை தடைசெய்வதை விட்டு, பிரிவினைக்கும் பிரிவினை வாத இயக்கத்திற்கு ஆதரவளித்தார்கள் என சாதாரண தமிழ் மக்களை கைதுசெய்வதிலும் வதைசெய்வதிலும் படுகொலை செய்வதிலும் மற்றும் பொருளாதார தடைமூலம் கூட்டாக தண்டிப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் இந்த அரசு, தமிழ்மொழியை சிங்கள பாடசாலைகளில் வெற்றிகரமாக கற்பித்து விடுவதால் நமக்கென்ன விடுதலை கிடைத்துவிடப்போகின்றது.

நமது தேசிய விடுதலை போராட்டம் இன்னும் ஒரு படி முன்னேறிச்செல்லும்போது, முப்பதாண்டுகளுக்கு முன்னர் ஈழத்தமிழர் முன்வைத்த ஒரு கோரிக்கையை நிறைவேற்றுகின்றோம் என எதிரிகள் முன்வரத்தான் போகின்றார்கள். எதிரிகளின் இப்படியான உத்திகளின் போது, இதுபற்றிப் பேசுவதே நமது நேரத்தையும் சக்தியையும் வீணடிப்பதாக அமையும் என்ற பிரக்ஞை நமக்கு வேண்டும்.

நமது அடிப்படையான அரசியல் உரிமைகள், தேசிய உரிமைகள் என்பன போராடிப் பெறுவதே தவிர அவர்கள் மனமுவந்து தந்து நாம் பெற்றுக்கொள்வதல்ல. அடக்குமுறையாளர்கள் அப்படி வழங்கியதகாக வரலாறும் கிடையாது என்ற யதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொண்டு நீண்ட கால போராட்டத்திற்கு நம்மை தயார்படுத்தித்தான் ஆக வேண்டும்.

★

## இந்தியா... (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பமானதை வரவேற்கும் ஒரு அர்த்தமற்ற பிரமையும் கலந்துள்ளதை நாம் மறந்துவிடக் கூடாது. இது ஒரு அகவிருப்பு சார்ந்த அரசியல் கணிப்பாக மட்டும் தான், இந்திய அரசின் பிராந்தியக் கொள்கையை அவதானிக்கும் போது தெளிவாகத் தெரியும். இந்திய அரசின் தேசிய ஆக்கிரமிப்புக் கொள்கை என்பதுடன் உரசிப்பார்த்தால் இந்திய ஆளுங் குழுமத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த அரசும் நமது போராட்டத்திற்கு ஆபத்தானது எனும் உண்மை புலப்படும்.

மக்களுக்கான அரசியலை முன்னெடுப்பவர்கள் எனும் அர்த்தத்தில் சக தேச மக்களின் அரசியலில் நமது நலன்களை தேடாது அவர்களது ஜனநாயக உரிமைகளை, சுதந்திரத்தை அது எந்தளவுக்கு பாதுகாக்கிறது என்பதில் அக்கறைப் படுவதிலேயே நமது அரசியலின் ஜனநாயகத் தன்மையும் நேர்மையும் தங்கியுள்ளது.

பி.ஜே.பி. வென்றது என பார்ப்பனிய - இந்துமதவெறி பிரிவினர் வெற்றிக் களிப்பில் திளைத்திருக்கும் இந்நேரம், பார்ப்பனிய - இந்துமதவெறியால் நேரடியாகப் பாதிக்கப்படும் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், தலித் மக்கள் தமது எதிர்கால இருப்பு, உயிர் வாழ்வுதொடர்பாக பாதுகாப்பற்ற நிலைக்கு தாம் தள்ளப்பட்டிருப்பதற்காக அச்சமும் பீதியும் நிறைந்த மனவுணர்வுகளால் அலைக்களிக்கப்பட்டுக்கொண்டிருப்பர். இம் மக்கள்பிரிவினர்கள் மீது அதிகரித்து வரும் இந்து மதவெறி ஆர். எஸ். எஸ். குண்டர்களின் தாக்குதல்களே இதற்கு சான்றாயுள்ளன.

பெண்களதும், அடக்கப்பட்ட தேசங்களதும், தலித் மக்களினதும், சிறுபான்மை மதப்பிரிவினரதும் ஜனநாயக உரிமைகளையெல்லாம் அச்சுறுத்தலுக் குள்ளாக்கியபடி, தமது பிற்போக்கான கலாச்சாரத்தைக் கட்டிக்காக்க எந்தவிதமான வன்முறை நடவடிக்கையிலும் ஈடுபடத் தயங்காத, சாதாரண சிவில் வாழ்க்கைக்கே அச்சுறுத்தலாயுள்ள பி.ஜே.பி. ஆட்சியமைப்பதனாது, நீண்டகால நோக்கில் இந்திய மக்களுக்கு பாதகமானதொன்றாகவே நாம் காண்கிறோம்.

★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களும் துஷ்பிரயோக அரசியலும்!

நமது தமிழ் சமூகத்தில் பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் பரவலாக நடைபெற்றுவரினும் அது பேசாப்பொருளாக மறைக்கப்பட்டே வருகிறது. குறிப்பாக இன்று ஆணும் பெண்ணும் தடையற்றுப் பழகுவதற்கு வாய்ப்பேற்படுத்தியுள்ள அரசியல் - இலக்கியச் சூழலில் பாலியல் துஷ்பிரயோகம் ஒரு போக்காக உருப்பெற்றுள்ளது. வெளிப்பார்வைக்கு இது பெண்ணின் சம்மதத்துடனேயே நிகழும் பாலுறவாக இருப்பினும், சற்று ஆழமாக அவதானித்தால், இதன் பின்னால் பெண்களின் பாலியல் ஆற்றலை சுரண்டும் ஆணாதிக்க நலன்கள் ஆதிக்கம் செலுத்துவதைக் கண்டறிய முடியும்.

நமது சமூகத்தில் பாலியல் துஷ்பிரயோகம் முதலில் ''பெண்களுக்கு பாதுகாப்பைத் தரும், இடமாகக் கூறப்படும் குடும்பத்திலேயே ஆரம்பிக்கிறது. கருக்குடும்பங்களாக அடையாளப் படுத்தப்பட்டாலும் சமூக அளவில் கூட்டுக் குடும்பத் தன்மையைக் கொண்டுள்ள குடும்பங்களின் உறவுமுறைமைக்குள் ஆண் உறவுகள் பெண் உறவுகளை பாலியல் நோக்குடன் அணுகுவது சகஜமானதொன்றாயுள்ளது. ஆண் உறவினர்களால் பெண்கள் குடும்ப அமைப்பிற்குள்ளேயே வெவ்வேறு வடிவிலான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு (வார்த்தையாலும், பார்வையாலும், பௌதீக ரீதியாகவும்) உள்ளாகின்றனர். இதை இன்னும் சற்று விரிவாக்கிப்பார்த்தால் நெருக்கமான அயலவ ஆண்கள், ஆண் ஆசிரியர்கள், சக ஊழியர்கள், மேலதிகாரிகள் மற்றும் அறிமுகமானவர்களால் இவ்வாறான துஷ்பிரயோகத்திற்கு பெண்கள் உள்ளாக நேர்கிறது.

இத்தகைய ஒரு சமூக அமைப்பிற்குள் உருப்பெறும் அரசியல் நிறுவனங்கள், இச் சமூகத்தின் இவ்வகைச் சித்தாந்தங்களை முறித்துக் கொள்வதில் பிரக்ஞை கொண்டிராத வரையில் சமூகத்தின் அனைத்து பிற்போக்கான குணாம்சங்களையும் தன்னுள் வரித்துக்கொண்டதாகவேயிருக்கும். இவ்வரசியல் நிறுவனங்களில் பால்நிலை பற்றிய முறையான விழிப்புணர்வு ஏற்படாத வரையில் இந்நிறுவனங்களினுள்ளும் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் இடம் பெறுவது சகஜமானதாயிருக்கும். கடந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல அமைப்புகளில் இத்தகைய போக்குகள் வெளிப்பட்டது நமது அனுபவமாயுள்ளது.

83 களில் எழுந்த உக்கிர தமிழ்த்தேசிய எழுச்சியானது, பெருமளவில் இளம் பெண்களையும் ஆண்களையும் போராட்டத்திற்குத் தள்ளியது. அதுவரை காலமும் இறுக்கமான சமூக விதிமுறைகளுக்குள் கட்டுண்டிருந்த பெண்களும் ஆண்களும் போராட்ட தளத்தில் ஒருவருடன் ஒருவர் சகஜமாகப் பழகும் வாய்ப்பைப் பெற்றனர். இவ்வாய்ப்பை சில ஆண்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விளைந்தனர். இதில் மிகவும் வினோதமானதென்ன வென்றால், அரசியல் வழிகாட்டலை தமது கையில் வைத்திருந்த பொறுப்புச் சொல்லக்கூடிய நிலையிலிருந்த சில தலைமை ஆண்களினால் அரசியல் செறிவேற்றப்பட்ட கருத்தாக்கங்களாக பாலியல் துஷ்பிரயோகத்தை ஊக்குவிக்கும் கருத்துகள் வெளிப்பட்டன.

அன்றைய கட்டத்தில் குறிப்பிட்ட சில அமைப்புகளே பெண்களை நிறுவன ரீதியாக உள்வாங்கியிருந்தன. அமைப்புக்குள் அரசியல் போதனை வகுப்புகளை நடாத்தி வந்த, தம்மை மார்க்சியர்களாக அறிமுகப்படுத்திக் கொண்ட சில ஆண்கள், குறிப்பிட்ட வட்டங்களில் பெண் விடுதலை என்பது சுதந்திரக் காதல் எனவும், ஆண்களும் பெண்களும் சுதந்திரமாக பாலுறவில் ஈடுபடுவதன் மூலமே பெண்கள் பூரண விடுதலை அடையமுடியும் எனவும் பிரச்சாரப்படுத்தினர். ஆண்களும் பெண்களும் தொட்டுப் பழகுதல், அருகருகே படுத்தல் யாவும் முற்போக்கான, புரட்சிகரமான பண்புகளாக சித்தரிக்கப்பட்டன. இது முற்போக்கான வாழ்வின் ஒரு அம்சமாக வழிகாட்டப்பட்டதுடன் இதை ஒரு வாழ்வியல் முறையாக்க வேண்டும் எனும் கருத்துகளும் ஊட்டப்பட்டன. இது சில ஆண்கள் பெண்களுக்கிடையே பாலுறவு ஏற்படக் காரணமாயமைந்தது.



''ஆணாதிக்கம் என்றால் என்ன?'' எனும் அடிப்படை விளக்கத்தைப் பெறுமுன்பே சுதந்திரக் காதல் பற்றிய சிந்தனையை, இறுக்கமான சமூகப் பின்புலத்தை சார்ந்த இளம் பெண்கள் ஆண்களிடையே விதைத்ததானது ஆண்களினால் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாவதற்கே இட்டுச் சென்றது. இங்கு இவ்வுறவை நாம் ''பாலியல் துஷ்பிரயோகம்'' எனக் கூறுவதன் காரணம் பெண்களெனும் வகையில் தமது வாழ்வியல் முறை எவ்வாறு அமைந்திட வேண்டும் என சுயமாகத் தீர்மானித்திடும் ஆளுமையைப் பெண்கள் பெற்றிராத நிலையில் ஆண்களினால் சிந்தனை ரீதியான தூண்டுதலுக்குள்ளாகி ஆண்களின் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டதனாலாகும். **சமூக ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் தம்மிலும் பலவீனமாயிருப்பவர்களை தமது செல்வாக்கின் மூலம் கட்டுப்படுத்தி அவர்களின் பாலியல் ஆற்றலை சுரண்டுவதை நாம் பாலியல் துஷ்பிரயோகமாக அடையாளப்படுத்த முடியும்.**

பாலியல் துஷ்பிரயோகம் என்பது தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும். இத்தவறை இழைக்கும் ஆண்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களாவர். நமது சமூகத்தில் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய புரிதலோ அது தொடர்பான மரபான மற்றும் நவீன சட்டங்களோ கிடையாது. பெண்களின் பாலியல் ஆற்றலை சுரண்டும் ஆணாதிக்கத்தின் ஒரு வடிவமாக பாலியல் துஷ்பிரயோகம் இருக்கையில் அது தொடர்பாக பெண்ணுரிமைச் சட்டங்கள் பாராமுகமாயிருக்க முடியாதல்லவா? பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக விரிவான புரிதல் சமூகத்திலும் குறிப்பாக பெண்கள் மத்தியிலும் ஏற்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கெதிரான சட்டங்களும் உருவாக்கப்பட வேண்டும். ஈழதேசப் பெண்களின் பெண்ணிய செயற்றிட்டத்தில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கெதிரான போராட்டமும் அதற்கெதிரான சட்ட நமவடிக்கை மற்றும் தண்டனை ஒரு அங்கமாக்கப்பட வேண்டியிருப்பதை இவ்விடத்தில் நாம் கவனத்தில் கொள்வோம்.

ஈற்றில் அமைப்புகள் சிதைந்து போராட்டத்திலிருந்து பெண்களும் ஆண்களும் வெளியேறுகையில் தம்முடன் உறவு கொண்ட பெண்களைதிருமணம் செய்வதை ஆண்கள் தமது சமூகப் பொறுப்பாகக் கருதவில்லை. பெரும்பாலான முன்னாள்ப் போராளிகளான ஆண்கள் சமூக அந்தஸ்த்து, சாதி, சீதனம் உட்பட போராட்டத்திலீடுபடாத ''குடும்பப் பாங்கான'' பெண்களைதிருமணம் செய்துகொள்வதிலேயே ஆர்வம் காட்டினர். சுதந்திரக்காதல் பற்றிய சிந்தனைகளை விதைத்த ஆண்களே தமக்கான சம்பிரதாய பூர்வமான குடும்ப வாழ்வை உருவாக்கிக் கொண்டனர். இதன் மறுபுறம் சுதந்திரக் காதல் எனும் பெயரில் ஆண்களினால் அத்துமீறலுக்குள்ளான பெண்கள் ஏமாற்றப்பட்ட மனநிலைக்கும் குற்ற உணர்விற்குமுள்ளாகினர். இரு பாலினருக்கிடையில் நடபெற்ற உறவில் பெண்கள் மாத்திரம் ஏன் குற்ற உணர்வுக்கும் குழம்பிய மனநிலைக்குமுள்ளாக வேண்டும்?

எதிர்ப்பாலுறவில் காதலை, பாலியலைத் தீன்மானிக்கும் அதிகாரம் ஆண்களின் கைகளிலேயே உள்ளது. பெண்களுக்கு அதற்கான உரிமைகள் ஆணாதிக்க சமூக முறைமைக்குள் மறுக்கப்பட்டேயுள்ளன. அதன் மறுபுறம் பெண்களது பாலியல் வாழ்வு மீது சமூகத்தால் பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் ஆண்களின் பாலியல் கையாள்கைக்கும் சமூகக் கட்டுப்பாடுகளுக்குமிடையில் பெண்கள் தமது பாலியல் பற்றி தீர்மானகரமாயில்லாத நிலையில் உளவியல் குழப்பங்களுக்கும் குற்ற உணர்வுக்கும் உள்ளாக நேர்கிறது.

பாலியல் துஷ்பிரயோகமானது ஆண்களினால் பெண்கள் மீது இழைக்கப்படும் குற்றமாகும். இங்கு குற்றவாளிகள் இத்தவறுகளுக்குக் காரணமாக ஆண்களே. இதில் பெண்களின் பக்கம் குற்றமில்லை. இந்நிலையில் எதற்காக பெண்கள் குற்ற உணர்வுக்கு உள்ளாக வேண்டும்? குற்ற உணர்வுக்கு உள்ளாக வேண்டியவர்கள் குற்றவாளிகளான ஆண்களும் அவர்களின் குற்றங்களை நியாயப்படுத்தும் ஆணாதிக்க சமூகமுமேயாகும்.

பாலுறவு சம்பந்தமான கட்டுப்பாடுகள், விதிமுறைகள் யாவும் சமூகத்தின் குறிப்பிட்ட கட்ட உற்பத்திமுறையுடன் இணைந்த ஆணாதிக்கமுறைசார் நலன்களின் விளைவாகும். பாலியல் ஒழுக்க விதிகள், கட்டுப்பாடுகள் என்றும் நிலையானவையல்ல. சமூகத்தின் மாற்றங்களுக்கேற்ப அவையும் மாற்றங்களுக்குள்ளாகின்றன. எனினும் பொதுவில் எல்லா சமூக அமைப்புகளிலுமே பாலியல் கட்டுப்பாடுகள், விதிமுறைகள் பெண்களை அழுத்துவதாயிருப்பதுடன் இவை ஒருதாரமுறைமையை அடிப்படையாய்க் கொண்டுள்ளன.

நம்மைப் பொறுத்தவரையில் மனிதர்களுகளுக்கிடையேயான பரஸ்பர பாலியல் உறவுகள் கட்டுப்பாடுகளுக்கும் அழுத்தங்களுக்கும் அப்பாட்பட்டு தனிமனித சுதந்திரத்தின் பாற்பட்டவையாய் மதிக்கப்பட வேண்டும். தனிமனித பாலியல் விருப்பங்கள், தெரிவுகள் சமூக அழுத்தங்களுக்குள்ளாகாத முறைமைக்குள் நிலவுகையிலேயே மானுட உளவியல் ஆரோக்கியமானதாய் அமையும் என்பது உளவியல் பற்றிய விதியாயுமுள்ளது. மனித பாலுறவு உணர்வுகளை இரும்புத்திரை விதிகளிலிருந்து விடுவிப்பதே பாலுறவு தொடர்பான ஜனநாயக அணுகுமுறையாகும்.

ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான பாலியல் உறவானது பரஸ்பரம் சமத்துவமான அணுகல், பரஸ்பர கௌரவிப்பு, சுரண்டலற்ற தன்மை, ஆதிக்கம் செலுத்தாமை... எனும் அடிப்படையில் அமைந்திடும் பொழுதே அது ஜனநாயக அடிப்படையிலானதாக அமைந்திட முடியும்.

பாலுறவை ஜனநாயகமாக இருபாலினத்தாரும் அணுகுவது என்பது இரு தரப்பிற்கிடையிலும் சமத்துவம் நிலவும் போதே முழுமை பெறும். ஒரு பகுதி அடக்கப்பட்ட நிலையில் இருக்கையில் ஜனநாயகமான பாலுறவு என்பதற்கு இடமில்லை. பெண்களைத் தொடர்ந்தும் சமூக ரீதியாக அடக்குமுறைக்குட்படுத்திக் கொண்டு பாலுறவில் மாத்திரம் சுதந்திரம், சமத்துவம் பற்றிக் கதைப்பது முதலாளியம் கூறும்

(தொடர்ச்சி 07இல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமாதான நகரம்

# ஆக்கிரமிப்பின் கீழ்!

யுனெஸ்கோ நிறுவனத்தினால் தமிழீழத்தின் தலைநகரம் சமாதான நகரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பல்லின,பல்கலாச்சார மக்கள்சமாதானமாக வாழ்கின்ற நகரம் என்ற அம்சம் யுனெஸ்கோவின் இத்தெரிவிற்கான காரணமாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது. எனினும் திருகோணமலையை சமாதான நகரமாக அங்குரார்ப்பனம் செய்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட விழா நடைபெற்றவிதம், திருமலையின் எதார்த்த நிலையை தெளிவாக உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

திருகோணமலை நகரின் சகல வீதிகளின் ஊடான போக்குவரத்துகளும் தடைசெய்யப்பட்டு உச்சநிலை கண்காணிப்பின் கீழ்தான் அது சமாதான நகரமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்தது. இது ஒரு அருமையான முரண்நகை. இவ்வளவு பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பின் கீழ்தான் சமாதான நகரமாக அங்குரார்ப்பணம் செய்ய வேண்டிய நிலை இருப்பின், சமாதானமும் அமைதியும் எவ்வளவு "ஆழமாக" திருகோணமலையில் நிலவுகின்றன என்பதை ஒருவர் புரிந்து கொள்ள முடியும்.

முப்படைகளின் கூட்டுக் கண்காணிப்பின்கீழ், திருமலை நகரம் இறுக்கமாக அழுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. நகரின் எந்தவொரு வீதியும் அரசபடைகளின் கண்காணிப்பிலிருந்து விடுபட்டிருப்பதில்லை. சோதனை சாவடிகளால் அல்லது ரோந்துப் படையினரால் ஒவ்வொரு கணமும் துளைக்கப்படாத எந்த வீதியும் திருமலை நகரில் இல்லை.

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களால், திருமலையின் இனப்பண்பு கடுமையாக மாற்றப்பட்டிருக்கின்றது. புனித நகர் திட்டத்தின் கீழ் திருமலை நகரின் கலாசார இயல்பும் அடையாளங்களும் தலைகீழாக்கப்பட்டுள்ளன. தரிசு நிலங்கள், சதுப்பு நிலங்கள் மட்டுமல்ல , தனியாரின் காணிகளும், மக்களின் குடியிருப்புகளும் பறிக்கப்பட்டு அவை சிங்கள மயமாக்கப்படுதல் இன்றும் வன்மத்துடன் இங்கு தொடர்கின்றது.

நகரின் பொருளாதார அடிப்படைகள், தமிழ், முஸ்லீம் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு அரச ஆதரவுடன் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள பிரிவினரின் கரங்களுக்குள் மாற்றப்பட்டு வருகின்றன. அரச மற்றும் தனியார் வங்கிகளின் பூரண ஒத்துளைப்புடன் கடல்சார் தொழில்களும், தனியார் போக்குவரத்து துறையும், சந்தை வியாபாரமும் சிங்கள பிரிவினரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றன. நகரசபையினால் எப்போதோ கட்டி முடிக்கப்பட்டு விட்ட ஒரு பல்கூற்று சந்தை தொகுதி மக்களின் பாவனைக்கு திறக்க முடியாமல் தடுக்கப்பட்டிருக்கின்ற அளவிற்கு திருமலையில் சமாதான சகவாழ்வின் யதார்த்த நிலை அமைந்திருக்கின்றது.

திருமலை நகரம், இனவன்முறைகளினதும் இன அழிப்புகளினதும் விளைநிலமாக மாற்றப்பட்டுள்ளது. இன அழிப்புகளின் சிதைவுகளும், துயரச் சின்னங்களும் அழியாச் சுவட்டுடன் இன்னமும் இங்கு நிடிக்கின்றன. நகரின் மிகப்பெரும் பகுதிகள் கடலால் சூழப்பட்டுள்ள நிலையில், அரச படைகளினதும், சிங்கள குண்டர்களினதும் தாக்குதல்களினால் தமிழ்மக்கள் அழித்து சிதைக்கப்பட்ட கோர நிகழ்வுகளை ஒருவர் இலகுவாக அட்டவணைப்படுத்த முடியும்.

தனது சொந்த தெருவில் சுதந்திரமாக நடமாட முடியாத அவலம்: சோதனைச்சாவடிகளை தலைகுனிந்து கடக்கும் அவமானம், நாளாந்த வழக்காகி விட்ட இராணுவ சுற்றிவளைப்புகளினால், வாழ்வுதன்னிடமிருந்து பறிக்கப்படும் கொடுமை. இவை அனைத்தையும் சுமந்து கொண்டு கொதிக்கும் உணர்வலைகளுடன் வாழும் நிர்ப்பந்தத்திற்கு, இங்குள்ள தமிழ்மக்கள் ஆளாக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு சிறிலங்கா அரசின் ஆதிக்கத்தின் கீழ், அடக்கி வைக்கப்பட்டுள்ள திருமலை நகரை, சமாதான நகராமாக யுனெஸ்கோ நிறுவனம் ஏன் தெரிவு செய்தது? எந்தக்கணமும் இனவன்முறையும், அழிப்பும் வெடித்து, கிளம்ப கூடியளவுக்கு அக அழுத்தமும் , முறுகலும் கொண்டிருக்கின்ற திருமலை நகரை சமாதான நகராக தேர்வு செய்திருப்பதன் பின்னணி என்ன?

முதலில் இந்த சமாதான நகர பிரகடனம், சிறிலங்கா அரசினால் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்கப்பட்டிருக்கிறது என்பதை கவனத்தில் கொள்வோம். சமாதான நகர் பிரகடனத்துடன் இணைந்த உடன்நிகழ்வகாக, திருமலையை பாரிய வர்த்தகநகரமாக மாற்றுவதற்கான திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. திருமலை துறைமுகத்தை நவீனமயப்படுத்துவதற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. உண்மையில் திருமலையை வர்த்தக நகரமாகவும், சுதந்திர வர்த்தக வலயமாகவும் மாற்றுவதற்கான முயற்சியை சிறிலங்கா அரசு நீண்ட காலத்திற்கு முன்பே தொடங்கி விட்டது. இவ்வாறான தொழில் மயமாக்கம், ஒரு நகரின் இன, கலாச்சார பண்புகளில் ஏற்படுத்தக்கூடிய பாதகமான தாக்கங்கள், ஏற்கனவே உலகின் பல நகரங்களில் நன்கு உணரப்பட்டுள்ளன. இந்த வகையில் திருமலை நகரம் பாரிய தொழில்பேட்டையாக மாற்றப்படும் போது சிங்கள பிரதேசங்களில் இருந்து இங்கு கொண்டு வந்து குவிக்கப்பட கூடிய, குவிக்கப்பட்டுள்ள சிங்கள மக்களின் எண்ணிக்கை அபரிதமாக இருப்பதோடு, இதனால் ஏற்பட கூடிய விளைவுகளும் மிக கடுமையானவையாக இருக்கும்.

இந்த விளைவுகளை பட்டியலிடுவது இங்கு அவசியமற்றது. கடந்த அரைநூற்றாண்டுக் காலத்தில், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களினால் நமக்கு ஏற்பட்ட அனுபவம் போதுமானவை. திருமலையை இராணுவ ரீதியாகவும், சிங்கள மயமாக்கல் மூலமாகவும் மட்டுமன்றி, வலுவான பாரிய பொருளாதார கட்டமைப்பிற்கூடாகவும் தனது ஆதிக்கத்தின் கீழ் தொடர்ந்தும் வைத்திருப்பது என்பது, சிங்கள அரசின் உறுதியான கொள்கையாக இருந்து வருகின்றது. திருமலையின் கேந்திர முக்கியத்துவம் மட்டுமன்றி, அது தமிழீழத்தின் தலை நகரம் என்ற அம்சமும் இதற்கு முக்கிய காரணமாகும். இந்நிலையில், திருமலை நகரம், சமாதான நகரமாக பிரகடனம் செய்யப்பட்டிருப்பதானது, சிறிலங்கா அரசின் இந்த நோக்கத்திற்கு சாதகமான வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கின்றது. சர்வதேச அங்கீகாரத்துடனும் ஒத்துழைப்புடனும் தமிழீழ தலை நகரை தனது ஆதிக்கப் பிடிக்குள் பேணுவதற்கான சந்தர்ப்பமாக சமாதானநகர் பிரகடனத்தை அரசு பயன்படுத்திக் கொண்டுள்ளது.

யுனெஸ்கோ நிறுவனத்தை பொறுத்தவரை, ஒருபுறம் அது முற்றிலும் தனது சுயமதிப்பீட்டின் அடிப்படையில், திருகோணமலையை தேர்வுசெய்வதற்கான சாத்தியம் உள்ளது. திருமலையின் அகநிலைமையை புரிந்து கொள்ள முடியாத நிலையில், தம்மால் பெறப்பட்ட திரிபுத்தகவல்களின் அடிப்படையில், இங்குள்ள சமூகங்கள் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ்வதாக அந்நிறுவனம் முடிவு செய்திருக்கலாம்.

எவ்வாறாயினும் யுனெஸ்கோ என்பது முற்றிலும் சுயாதீனமான ஒரு நிறுவனம் அல்ல. அது ஏகாதிபத்திய மற்றும் நவகொலனித்துவ சக்திகளின் நிதி உதவியுடனும், ஆதிக்கத்திலும் இயங்குகின்ற ஒரு நிறுவனம். இந்த வகையில் திருகோணமலையை சமாதான நகரமாக தேர்வு செய்திருப்பதில், இத்தகைய ஆதிக்க சக்திகள் வகித்திருக்க கூடிய பாத்திரம் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.



திருகோணமலை உலகில் மிகச்சிறந்த இயற்கை துறைமுகத்தைக் கொண்ட நகரமாகும். மேலும் இது கடற்போக்குவரத்துக்குரிய சிறப்பான புள்ளியில் அமைந்துள்ளது. எனவே வர்த்தக மற்றும் தொழில் நகரமாக பயன்படக்கூடிய மிக வாய்ப்பான நிலையில் இது விளங்குகின்றது. ஏற்கனவே, பிரிமா, மிட்சுயி போன்ற பல்தேசிய நிறுவனங்கள் மிகுந்த இலாபத்துடன் இங்கு இயங்கிக்கொண்டிருக்கின்றன. இத்தகைய பின்புலத்தில், திருமலையை சமாதான நகரமாக பிரகடனப்படுத்தி, அதை திட்டமிட்ட ரீதியில் வர்த்தக மற்றும் தொழில் மையமாக மாற்றுவதன் மூலம் இந்த ஏகாதிபத்திய, நவகொலனித்துவ சக்திகளுக்கு மிகப் பெரிய நலன்கள் காத்திருக்கின்றன என்பதில் நாம் தெளிவாக இருப்போம்.

இவ்வாறாக, திருமலை நகரமானது சிறிலங்கா அரசிற்கும், சர்வதேச ஆதிக்க சக்திகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால், இவ்விரண்டு பிரிவினருக்கும் இடையே மேலும் இறுக்கமான கூட்டு ஏற்படுவதும், இதன் மூலம் அவர்கள் தத்தமக்குரிய நலன்களை பாதுகாத்துக் கொள்ள முயற்சிப்பதும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய விடயங்களே. எனவே திருமலை சமாதான நகர பிரகடனப் பின்னணியில், சிறிலங்கா அரசு மற்றும் சர்வதேச சக்திகளின் தீவிர அக்கறைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதையும், இது நம் தேசத்தின் விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும், இறைமைக்கும் ஆபத்தாகவும் தடையாகவும் சவாலாகவும் அமைந்திருக்கின்றது என்பதையும் நாம் பிரக்ஞையில் கொள்ள வேண்டும்.

நமது போராட்டத்தில் சர்வதேச தலையீடு என்பது ஏற்கனவே ஆரம்பித்து விட்டது. இந்திய படைகளின் நேரடி ஆக்கிரமிப்பு ஒரு கட்டத்தில் இருந்தது. அடுத்து விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக அமெரிக்க அரசு பிரகடனப்படுத்தியிருப்பதன் மூலம், நமது போராட்டத்தில் ஏகாதிபத்தியத்தின் தலையீடு ஆரம்பித்து விட்டது. சிறிலங்கா அரசிற்கான நிதி உதவி, ஆயுதவிற்பனை, ஆயுதபயிற்சி என்பவற்றோடு, நேரடியாக யுத்தமுனையில் ஆலோசனை வழங்குதல். . . என இத்தலையீட்டின் விரிவும் வேகமும் அதிகரித்து வருகின்றது. இத்தகைய பின்புலத்தில், திருமலையை சமாதான நகரமாக பிரகடனப்படுத்தயிருப்பதன் மூலம், இந்த சர்வதேச ஆதிக்க சக்திகளின் தலையீட்டிற்கான புதிய மார்க்கம் ஒன்று திறக்கப்பட்டிருப்பதை நாம் கவனத்தில் பதிப்போம்.

சர்வதேச ஆதிக்க சக்திகளின் தலையீடு. நமது விடுதலைப் போராட்டத்தில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதாகும். பாரிய மூலதனத்தையும், ஆயுத பலத்தையும் கொண்ட, சர்வதேச ஆதிக்க சக்திகளின் நலன்கள் இங்கு நேரடியாக சம்பந்தப்படவிருக்கின்றன. இதன் பின்னர், நமது விடுதலை போராட்டத்தை தமக்கேற்ற விதத்தில் முடிவிற்கு கொண்டு வருவதில், இந்த ஆதிக்க சக்திகள் தீவிரமாக முயற்சிக்கும் என்பதையும், இச்சக்திகளின் இலக்கானது, எமது சுதந்திரத்தையும் இறைமையையும் எம்மிடமிருந்து பறிப்பதாகவே இருக்கும் என்பதையும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

எனவே, நாம் இவ்விடயங்களில் தெளி-

(தொடர்ச்சி 7இல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "நமது தேசம்"

தேசியம் என்பது, கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக, அரசியல்துறை சார்ந்தவர்களினதும், கோட்பாட்டாளர்களினதும் சிந்தனை ஆற்றலுக்கு சவாலாக அமைந்து, இன்னமும் துல்லியமாக விளக்கப்பட முடியாதிருக்கின்ற நிகழ்வாகவே விளங்குகிறது. 18ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில், மாபெரும் மக்கள் எழுச்சியாக பிரான்ஸில் தொடங்கிய தேசிய இயக்கம், 20ம் நூற்றாண்டின் இறுதிக் கணத்தில்கூட, தன்னுடைய மெருகு குலையாமல், புதிய வலிவுடன் உலகின் சகல பகுதிகளையும் வியாபித்து செல்வதையே காண்கிறோம். புவியியல் எல்லை, இனம், நிறம், மதம், மொழி, கலாச்சாரம். . . போன்ற வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து, மிகப் பெரும்பாலான சமூகங்கள் தேசிய இயக்கத்தின் தாக்கத்திற்கு உடபட்டிருக்கின்றன.

19ம் 20ம் நூற்றாண்டுகளின் எல்லைகளுக்கிடையிலும், தேசிய இயக்கமானது பல வடிவங்களைப் பெற்றிருக்கின்றது. பிரான்ஸில் நடந்தது போன்று, புரட்சிகர சமூக மாற்றத்திற்கான இயங்கு தளமாகவும், அதேவேளையில் ஜேர்மனியில் போன்று ஈவிரக்கமற்ற கொலைவெறியுடன் உலகை ஆக்கிரமிக்க முனைந்த நாஸிக்களின் அரசியல் ஆயுதமாகவும், லிபியாவில் போன்று, அந்நிய ஆதிக்கத்திலிருந்து சுதேச மக்களை விடுபடுவதற்கான சுதந்திர போராட்டமாகவும் தேசிய இயக்கம் பல பரிமாணங்களை பெற்றிருக்கின்றது. நூற்றுக்கணக்கான சமூகங்கள், தமது அரசியல் சுதந்திரத்தை வென்று கொள்ளவும், தமக்கான சொந்த அரசியல் பாதையை செப்பனிடவுமான சித்தாந்த மற்றும் செயல்பாட்டுக் கருவியாக தேசியம் பயன்பட்டிருக்கின்றது. தேசிய இயக்கமானது, வியட்நாமில் போன்று நீண்டதும், கடுமையான அழிவுகளை சந்தித்ததாகவும் இருந்த அதேவேளை, செக்கோஸ்லாவியாவில் போன்று, குறுகிய காலத்தில், மக்களின் விருப்புத் தேர்வாக அமைந்ததாகவும் வெளிப்பட்டிருக்கின்றது.

எந்தவொரு தேசிய இயக்கமும், இன்னொன்றின் பிரதிபண்ணலாக அமைந்ததில்லை. நிர்ணயிக்கப்பட்ட எந்த வரையறையையும் தேசிய இயக்கங்கள் பின்பற்றியதில்லை. ஒவ்வொரு தேசிய இயக்கமும் தனக்கேயுரிய குறிப்பான பண்புகளுடன், தனித்துவமான பதிவுகளை கொண்டிருக்கின்றன. எல்லையிட முனைந்த வரையறைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்துவிட்டு, தேசிய இயக்கமானது புதிய இடம் நாடும் காட்டாற்று வெள்ளம் போல், புதிய சமூகங்களுக்குள் ஊடுருவியுள்ளது. தேசிய இயக்கம் வெளிப்படுத்தியுள்ள இத்தகைய பண்பானது அதன் மீதான மதிப்பீடுகளை கடினமாக்கியுள்ளது. இது தேசிய இயக்கம் குறித்து மிகப்பல விமர்சனங்களும், விளக்கங்களும் முன்வைக்கப்படுவதற்கு காரணமாகின்றது.

இவ்வாறு தேசிய இயக்கம் சிக்கலானதும், ஒற்றைப் பரிமாண விளக்கத்திற்குட்படாததாகவும் அமைந்திருந்த போதிலும், சாராம்சத்தில் அது பொதுவான அடையாளம், அடையாளங்கள் கொண்ட மக்கள் திரளின் அரசியல் இயக்கம் என்ற பண்பை எங்கும் வெளிப்படுத்தியிருக்கின்றது. தேசிய இயக்கமானது, மக்கள் திரளின் அரசியல் இயக்கமாக விளங்குவதுதான் அதன் சிறப்பம்சமாகவும் அமைகின்றது.

இலங்கையின் சுதந்திரத்துடன், நமது மக்களின் அரசியல் இயக்கமானது தனியான தேசிய இயக்கம் என்ற பரிமாணத்தை எடுத்தது. இலங்கை, ஐரோப்பியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில், தமிழ்மக்களின் அரசியல் இயக்கமானது, பல சந்தர்ப்பங்களில், சிங்கள மக்களின் அரசியல் இயக்கத்துடன் இணைந்தும், ஒன்றுகலந்தும் இயங்கியது. எனினும் சுதந்திரத்தின் பின்னர் சிறிலங்கா அரசு, சிங்கள அரசாக வடிவம் கொண்டு, இங்குள்ள ஏனைய சமூகங்களை அடக்கவும், ஆக்கிரமிக்கவும் முயற்சித்தபோது, அதனை தமிழ்மக்கள் முதலாவதாகவும், தீவிரமாகவும் உணர்ந்து கொண்டனர். சிறிலங்கா அரசின் இத்தகைய முயற்சிகளுக்கு எதிராக, அவர்கள் உறுதியானதும், விட்டுக் கொடாததுமான போராட்டத்தை முன்னெடுத்தனர். சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு இன அழிப்பையும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையையும் நமது மக்கள் தீரத்துடன் எதிர்த்து வந்திருக்கிறார்கள். இத்தகைய நீண்ட போராட்டத்தினூடாக நாம் ஒரு தேசமாக உருவாகியுள்ளோம். இன்று நமது தேசிய இயக்கத்தின் இறுதி இலக்கு என்பது, நமக்கான தேச அரசை நிறுவிக் கொள்வது என்ற உயர் அரசியல் இலட்சியமாக பரிணமித்துள்ளது.

நமது தேசியம் எளிமையானது: வலிமைமிக்கது: நம்மை காத்து நிற்பது, நமது மண்ணை நமது இருப்பை நமது கலாச்சாரத்தை, நமது வாழ்வை பாதுகாத்து வருகின்ற அரசியல் கேடயமாக நமது தேசியம் விளங்குகின்றது. நமது கௌரவத்தையும், மாண்பையும் அது உலகெங்கும் எடுத்துச் செல்கின்றது. அது ஒளிர்விளக்கு போன்று, சர்வதேச அரங்கில் நம்மை அடையாளம்காட்டி நிற்கின்றது. கொலனித்துவ சுதந்திரத்தின் பின்னரான, நமது வாழ்வின் அனைத்து அம்சங்களிலும், நமது தேசியம் தனது அடையாளத்தை அழுத்தமாக பதித்துள்ளது. அது நமது வாழ்வாக, நமது சாரமாக அமைந்திருக்கின்றது.

நமது தேசியமானது நமது மக்களிடையேயே மாபெரும் அரசியல் விழிப்புணர்வையும், அரசியல் எழுச்சியையும் தோற்றுவித்துள்ளது. நமது மக்களின் போராட்ட ஆற்றலை அதன் முழுவலிவுடன் வெளிக்கொணர்ந்துள்ளது. காலம் காலமாக பால் ரீதியாகவும், சாதி ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் அடக்கப்பட்டிருந்த மக்கள் பிரிவினர், அரசியலில் நேரடியாக பங்குபற்றவும், தீர்மானகரமான சக்திகளாக மாறவும் கூடிய சூழலை நமது தேசியம் தோற்றுவித்துள்ளது. இங்குள்ள ஏனைய சமூகங்களான முஸ்லீம்கள் மற்றும் மலையக தமிழர்களின் அரசியல் வாழ்வில் நமது தேசியம் ஆழ்ந்த பாதிப்புகளையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியிருக்கின்றது. சர்வதேச அரங்கில், தேசியப் போராட்டம் சார்ந்தும், கெரில்லா போர் முறையிலும்புதிய, வளமான, மதிப்பிடற்கரிய அனுபவங்களை நமது தேசியம் வழங்கி வருகின்றது.

இவ்வாறு நமது வாழ்விலும், சர்வதேச அரங்கிலும் புரட்சிகரமான நிகழ்வுகளின் தோற்றுவாயாக அமைந்துள்ள நமது தேசியம், மறுபுறம் மக்கள் விரோத, எதேச்சாதிகார பண்புகளின் விளைநிலமாக பயன்படுத்தப்பட்டு வருவதையும் நாம் காண்கிறோம். நமது தேசிய அரசியலில் செயற்பட்டு வருகின்ற அரசியல் அமைப்புக்கள், மக்களின் சுதந்திரத்தின் மீதும், உரிமைகள் குறித்தும் நம்பமுடியாத அளவிற்கு அக்கறையற்று இருந்து வந்திருக்கின்றன. மக்களிடமிருந்து பிரிக்க முடியாத, அவர்களின் பிறப்புடன் இணைந்துவிட்ட சுதந்திரத்தையும், உரிமைகளையும் ஊதாசீனப்படுத்தியிருப்பது மட்டுமல்ல, மக்கள் அவற்றை அனுபவிப்பதை இந்த அரசியல் அமைப்புக்கள் தடுத்தும் வந்திருக்கின்றன. தமது முடிவுகளை, தேவைகளை, நலன்களை, மக்களுடையவைகளாக அர்த்தப்படுத்தி, அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி, சகல அரசியல் அமைப்புக்களும் நமது மக்களை நிர்ப்பந்தித்து வந்திருக்கின்றன. நமக்கருகே நம்மோடு கலந்து வாழ்கின்ற முஸ்லீம்கள் மீது, இனப்பகைமை கொண்டு, அவர்களின் சுதந்திரம், உரிமைகள் என்பவற்றை முற்றாக மறுத்தும், அவர்கள் மீது வன்முறைகளை பிரயோகித்தும், இன அழிவுக்குட்படுத்தியும், ஈற்றில் வடக்கிலிருந்து அவர்களை முற்றாக வெளியேற்றியும் இருக்கின்ற கொடுரத்தை இவை நிறைவேற்றியிருக்கின்றன. இவை அனைத்துமே நமது தேசியத்தின் பெயரால், நியாயப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன என்ற அவமானகரமான உண்மைகளை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இவ்விதம் நமது தேசியம் ஒரே நேரத்தில், புரட்சிகர எழுச்சியின் மூல ஊற்றாகவும், எதேச்சாதிகார நடைமுறைகளின் தளமாகவும் விளங்குகின்ற முரண்நகையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த முரண்பாடு என்பது, நமது தேசியத்திற்கு மட்டும் உரிய குறிப்பான பண்பு அல்ல. மாறாக உலகில் தோன்றியிருக்கின்ற மிகப்பெரும்பாலான தேசிய இயக்கங்கள், இவ்விரண்டு வகையான முரண்பட்ட அம்சங்களையும் தம்மகத்தே கொண்டவையாகவே இருந்திருக்கின்றன. எந்தளவுக்கு இவை, தம்மத்தியில் காணப்பட்ட எதேச்சதிகார, மக்கள்விரோத பண்புகளை அகற்றி தம்மை செழுமைப்படுத்தினவோ, அந்தளவுக்கு அவற்றின் புரட்சிகர, முற்போக்கு தடயங்கள் வரலாற்றில் அழுத்தமாய் பதிந்திருக்கின்றன. இத்தகைய முற்போக்கு தேசியத்தின் மிக அண்மைய உதாரணமாக, தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலை நிகழ்வுகள் அமைந்திருக்கின்றன.

நமது தேசத்துப் பெண்களும், சாதி ரீதியாக அடக்கப்பட்டிருக்கின்ற மக்கள் பிரிவினரும் தற்போது நமது தேசிய இயக்கத்தின் தீர்மானகரமான சக்திகளாக மாறியிருக்கின்ற போதிலும், நம்மத்தியில் நிலவுகின்ற ஆணாதிக்க முறைமையிலும், சாதிய முறைமையிலும் இன்னமும் அடிப்படை தகர்வுகள் ஏற்படவில்லை. நம்மத்தியில் - வெகுஜன அளவிலும், அரசியல் அமைப்புகளிலும் ஜனநாயக நடைமுறைகள் இன்னமும் உறுதியாக வேரூன்றவில்லை என்பதோடு, அவை குறித்த தெளிவான புரிதலும் இன்னமும் நம்மத்தியில் உருவாகவில்லை. நமது சிந்தனைகளில் பிரதேசவாதமும், இனவெறுப்பும் இன்னமும் ஆழப் பதிந்திருக்கின்றன. இவை அனைத்தும் அகற்றப்பட வேண்டும். நமது தேசியத்தின் புரட்சிகர பண்பை கேள்விக்குள்ளாகியிருக்கின்ற இந்தக் கறைகள் முற்றாக நீக்கப்பட வேண்டும். நமது தேசியம் செழுமைப்படுத்தப்பட வேண்டும்.

இத்தகைய செழுமையாக்கம் என்பது, அகநிலையில் நமக்கிடையே நிலவுகின்ற ஆதிக்க முறைமைகளை அகற்றுவதாகவும் புறநிலையில் இனவெறுப்பிலிருந்து விடுபடுவதாகவும் அமைய வேண்டும். நமது வாழ்வின் மீது, சுதந்திரத்தின் மீது, உரிமைகளின் மீது, நாம் கொண்டிருக்கின்ற தீராத ஆர்வமானது, சகல மக்கள் பிரிவினரையும், சமூகங்களையும் சமத்துவமாக மதிக்கின்ற உளப்பாங்கை நம்மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அனைத்து மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் கௌரவிக்கின்ற, புரிந்தேற்றுக் கொள்கின்ற மனோபாவம் நம் தேசத்தில் நிலைபெற வேண்டும்.

நம்மால் இவற்றை சாதிக்க முடியும். மாபெரும் விடுதலை போராட்டத்தில் தீரத்துடனும், உயர்ந்த அர்ப்பணிப்புடனும் ஈடுபட்டிருக்கின்ற நமக்குள், நம்மை செழுமைப்படுத்தக் கூடிய ஆன்மீகப் பலம் உள்ளூறைந்துள்ளது என்பதை உணர்ந்து கொள்வோம்! நமது புரட்சிகர பண்புகளின் மூலம் நமது தேசியத்தின் மாண்பையும், நமது விடுதலையின் அர்த்தத்தையும் வரலாற்றின் பக்கங்களில் குறிப்போம்! நமது தேசியம் - அதுவே நாம் என்பதை, நமது செயல்களின் மூலம் உலகுக்கு அறிவிப்போம்!

★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பெண்களும்... (4ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தைச் சமத்துவத்திற்கு ஒப்பானதாகும். உழைப்புச் சந்தையில் முதலாளியும் தொழிலாளியும் சமமானவர்களே. தொழிலாளி தான் விரும்பிய முதலாளிக்கு தனது உழைப்பை வழங்கும் சுதந்திரமுடையவர். ஆனால் இதன் பின்னாலுள்ள உழைப்புச் சுரண்டல் சந்தை ஜனநாயக உரிமையின் பின்னால் மறைக்கப்பட்டுவிடுகிறது. இதைப்போன்றதொரு செயலே ஆணாதிக்க சமூக அமைப்பிற்குள் குறிப்பாக பாலியில் சுதந்திரம் பற்றிய சிந்தனையை பெண்களிடம் விதைப்பதுமாகும். பெண்ணுடலை கட்டுப்படுத்துவதையும் சுரண்டுவதையும் பாலியலின் அடிப்படையாகக் கொண்டிருக்கும் சமூகமுறைமைக்குள் 'சுதந்திரக் காதல்' எனும் கருத்தாக்கம் மேலும் ஆண்களால் பெண்கள் பாலியல் சுரண்டலுக்குள்ளாவதற்கே இட்டுச்செல்லும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த அமைப்புகளின் தொடக்க காலத்தில் போராளிகள் (ஆண்கள்) காதலிப்பது, திருமணம் செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. காரணம் பெண்கள் ஆண்களின் போராட்ட உணர்வை மழுங்கடித்துவிடுவர், பெண்களால் இரகசியம் பேண முடியாது என்பதாலாகும். இது பெண்கள் பற்றிய ஆணாதிக்க சமூக சிந்தனையின் ஒருமுனையென்றால் போராட வந்த பெண்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய விளைந்தது இன்னொரு முனையாகும். இவ்விரு போக்குகளுக்குமே ஆணாதிக்க அரசியல் கோட்பாட்டில் விளக்கங்கள் இருந்தன.

"சுதந்திரமாகப் பாலுறவில் ஈடுபடுவதே பெண்விடுதலை," "ஆணும் பெண்ணும் தொட்டுப்பழகுவதே முற்போக்கு" எனும் சிந்தனைப் போக்கு ஈழத் தமிழ் சூழலில் உருப்பெற்றுள்ள (குறிப்பாக புலம்பெயர் நாடுகளில்) பல்வேறு அரசியல் - இலக்கிய வட்டங்களில் இன்றும் நிலவி வருகின்றன.

மார்க்சியம், அமைப்பியல்வாதம், நவீனத்துவம், பின்நவீனத்துவம்... எனும் பல்வேறு சிந்தனைப் பள்ளிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக தம்மை அழைத்துக்கொள்ளும் வட்டங்களைச் சார்ந்த ஆண்களிடமிருந்தே இத்தகையக் கருத்துகள் பெரிதும் வெளிப்படுகின்றன. இச்சிந்தனைப் பள்ளிகளின் அரசியல் கருத்தாக்கங்களை யெல்லாம் கடந்து இக்குறிப்பிட்ட வட்டங்களின் நபர்களின் கருத்துக்களை தனியே எடுத்துப்பார்த்தால் இது சம்பந்தப்பட்ட ஆண்களின் ஆணாதிக்க நலன்சார் சிந்தனைகளேயன்றி வேறில்லை. பெண்களை பாலியல் ரீதியான சுரண்டலுக்குள்ளாக்க முயலும் ஆண்களின் ஆர்வங்களே காலத்திற்குக் காலம் வெவ்வேறு அரசியல் சிந்தனைகளுடன் தொற்றிக் கொண்டு வெவ்வேறு கோஷங்களுடன் வெளிப்படுகின்றன.

இப்போக்கின் நீட்சியாக பெண்ணுடலை கூறுபோடும் இலக்கியங்கள் இத்தகைய ஆண்களால் வெளியிடப்படுகின்றன. பெண்களால் சகித்துக்கொள்ளவே முடியாத இந்த எழுத்துக்களெல்லாம் ஹீபெண்களின் விமோசனத்திற்காக, என அறிமுகப்படுத்தப்படுவது பெண்களை புதிய வழிகளில் அடக்கும் இழிவுபடுத்தும் போக்கேயாகும்.

பெண்விடுதலை என்பது ஆணாதிக்க சமூக முறைமைக்குள் பெண்கள் மீது நிறுவனமயப்பட்ட வடிவில் இழைக்கப்படும் அனைத்துவிதமான அடக்குமுறைகளிலிருந்தும் பெண்கள் சமூக அளவில் விடுதலையடைவதாகும். இது பெண்கள் தம்மீதான அடக்குமுறையை இனங்காணுதல், அதற்கெதிராக போராடுதல்... என்பதாகும். இதற்குமாறாக பெண்களது வாழ்வில், உணர்வில், உடலில் ஆண்கள் தம்மால் புனையப்பட்ட சிந்தனைகளுடன் தலையீடு செய்ய முயல்வதை பெண்களான நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பெண்ணிய சிந்தனையை பெண்களை விடத் திறமையாக வெளிப்படுத்துவதினூடாக தம்மை பெண்களின் அபிமானத்திற்குரியவராக்கிக் கொண்டு அதன் மூலம் பாலியல் துஷ்பிரயோகத்திலீடுபடும் - பட முயலும் ஆண்கள் பலர் நம் மத்தியில் வாழ்கின்றனர். உண்மையிலேயே பெண்களின் நலன்களுக்காகக் குரல் கொடுக்கும் ஆண்களுக்கும் இப்போலிகளுக்குமிடையே நாம் வேறுபாட்டைக் கண்டறிந்திட வேண்டும். தமது ஆணாதிக்க நலன்களில் கடுகளவைத்தானும் இழக்க விரும்பாத நிலையிலிருந்து கொண்டு பெண்ணியம் கதைக்கும் ஆண்களின் ஏமாற்றுத்தனங்களுக்கு பெண்ணியவாதிகளாக தம்மை உணரும் பெண்கள் கூட பலியாகிப் போவது பெண்களின் நிலையில் அவலமானதாகும். இத்தகைய ஆண்கள் தொடர்பாக பெண்கள் விழிப்பாயிருப்பதும் அவர்களின் ஆணாதிக்க சுயத்தை இனங்கண்டு அம்பலப்படுத்துவதும் பெண்களின் பரஸ்பர சகோதரித்துவக் கடமையாகும்.

பெண்கள் நாம் யாருடன் வாழப் போகிறோம்? எமது பாலுறவு மற்றும் வாழ்வியல் முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் எம்மைச் சார்ந்ததாகும். பெண்களின் இச்சுயநிர்ணய உரிமையில் தலையீடு செய்வதையும், நமது சுயநிர்ணயம் தொடர்பாக வரையறைகள், வியாக்கியானங்கள் செய்வதையும் வன்முறைசார் நடவடிக்கையாகவே நாம் உணர்கிறோம். ஆணாதிக்கப்பாலியல்கையாள்கை எந்தத் தளத்திலிருந்து உருவாகினாலும் அதை எதிர்த்துப் போராடி முறியடித்திடுவதே பெண்களின் ஆளுமையை உறுதிப்படுத்தும் என்பதில் பெண்களான நாம் பிரக்ஞையுடனேயே இருக்கிறோம்.

★

# பொ.ஐ.மு அரசாங்கம் கவிழ்க்கப்படுமா காப்பாற்றப்படுமா?

பொது ஜன முன்னணி அரசாங்கம் இந்த ஐந்து வருட காலத்தில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தப்பிப்பிழைத்து ஆட்சி செய்ததை ஒரு சாதனையாக பிரச்சாரப்படுத்தி வருகின்றது. இந்த அரசாங்கத்தை அதன் பங்காளி என அழைத்துக்கொள்ளும் முஸ்லிம் கொங்கிரஸ் கவிழ்த்துவிடுமா? அவ்வாறு கவிழ்க்க முற்பட்டால் ஈ.பி.டி.பி. இந்த அரசாங்கத்தை தாங்கி காத்து நிற்குமா என்ற செய்தி அரசியல் வட்டாரங்களில் விவாதிக்கப்படுகின்றது.

இது ஒரு புறம் இருக்கட்டும் சிங்கள அரசும் அதன் கூறுகளாகிய பாராளுமன்றமும், சிங்கள அரசியல் கட்சிகளும், இதுவரை காலமும் தமிழ், முஸ்லிம் மற்றும் லையகத் தமிழ் சமூகங்களை அடக்குமுறைகளுக்குள்ளாக்கி வருகின்றன. அடக்குமுறைகளின் வடிவங்களும், தீவிரமும் வேறுபட்டிருந்த போதிலும் அடிப்படையான நிலைமை ஒன்றே, ஒருபுறம் அடக்குமுறைகளை தீவிரப்படுத்திக்கொண்டு, மறுபுறம் இச்சமூகங்களின் அரசியல் பிரதிகளுக்கு சில சலுகைகளை வழங்கி உரிமைகளை பறிப்பதை மிகவும் வெற்றிகரமாக இந்த அரசாங்கங்கள் நிறைவேற்றி வருகின்றன.

இன்று கிழக்கின் தென்பகுதி பிரதேசம் முழுவதும் (அம்பாறை மாவட்டம்) சிங்களவர்களுக்கு சொந்தமானது, மற்ற இனத்தவர் அனைவரும் வெறியேறிவிட வேண்டும் என சிங்கள வீரவிதான போன்ற அமைப்புக்கள் வெளிப்படையாகவே செயற்படத் தொடங்கியுள்ளன. புள்ளிவிபரங்களையும், பொய்யான சான்றுகளையும் சமர்பிக்கின்றன. சனத்தொகை விகிதாசாரத்தை தற்போதும் மாற்றியமைத்து வருகின்றன. நிலங்கள் பறிக்கப்படுகின்றன. இந்த போக்குகளை தற்போதைய அரசாங்கங்கள் பின்னின்று ஊக்குவிக்கின்றது. அல்லது மௌன அங்கீகாரம் செய்கிறது.

இப்படிப்பட்ட அரசாங்கங்களின் ஒன்றான பொ.ஐ.மு அரசாங்கங்களது தமிழ் தேசத்தின் இருப்பை நிர்மூலம் செய்யும் விரிவான திட்டத்துடன் இன அழிப்பு போரை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. இப்போர் நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக அமையும் அவசரகால சட்டத்தை நீடித்து கொள்ள இந்த அரசாங்கங்களால் அடக்கப்பட்டு வரும் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் செய்யும் முஸ்லிம் கொங்கிரஸ் மட்டுமல்ல, ஈ.பி.டி.பி. புளொட் போன்ற தமிழ் அமைப்புகளும் தமது வாக்குகளை அளித்து பக்கபலமாக நிற்கின்றன.

இருந்த போதிலும் தம்மை தாங்கி நிற்கின்ற தமிழ், முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளை பிரித்துக் கையாள்வதையும் ஈற்றில் இவ்விரண்டு சமூகங்களையுமே பிளவுபடுத்தி, மோதலுக்குள்ளாக்குவதையும் சிங்கள தலைமைகள் நீண்ட காலமாக அரசியல் கலையாகவே மேற்கொண்டு வருகின்றன. இப்போக்கு கடந்த 50 ஆண்டுகளாகவே இருந்து வருகின்றது.

இங்கு தமது அக்கறைக்குரிய விடயம், முஸ்லிம் கொங்கிரஸ் தனது ஆதரவை விலக்கிக் கொள்ளுமா? பதிலக்கு ஈ.பி.டி.பி தனது ஆதரவை அரசாங்கத்திற்கு தந்து அதனை தாங்கி காப்பாற்றுமா என்பதல்ல நமது அரசியலுக்கு இது அவசியமற்ற விடயமும் கூட. மாறாக. சிங்கள அரசுத் தலைமைகள் தமிழ், முஸ்லிம் சமூகங்களை பிரித்தும் பிளவுபடுத்தியும் கையாள்வது குறித்தும் படிப்படியே அனைத்து உரிமைகளையும் பறித்து வருவதையும் நீண்ட காலமாகவே மேற்கொண்டு வருவதிலுள்ள ஆபத்து குறித்துமே நமது கவனம் ஈர்க்கப்படுகிறது.

50 வருடங்களுக்கு முன்பு மலையக தமிழரின் வாக்குரிமை உட்பட அடிப்படை அரசியல், சமூக உரிமைகளை பறிப்பதற்கு, அன்றைய தமிழ், முஸ்லிம் அரசியல்

(தொடர்ச்சி 2இல்)

## சமாதான...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாகவும் பிரக்ஞைபூர்வமாகவும் இருப்போம். நமது போராட்டமானது, புதியதொரு கட்டத்திற்குள் நுழைந்து கொண்டிருக்கின்றது. இப்புதிய கட்டத்திற்கேற்ப நமது போராட்டம் புதிய பரிமாணத்தையும் போராட்ட சக்திகளையும் வழிமுறைகளையும் அடைந்து கொள்வது அவசியம். வரலாற்றில் வெற்றியடைந்த ஒவ்வொரு போராட்டமும், தமது பாதையில் பல்வேறு திருப்பங்களை கடந்தே பயணித்துள்ளன. இன்று வரையிலான நமது போராட்ட அனுபவமும் இத்தகைய பல திருப்பங்களை நாம் வெற்றிகரமாக கடந்து வந்த வரலாறாகவே இருக்கின்றது. உண்மையான மக்கள் போராட்டம் என்ற வகையில், நமது போராட்டம், தன்னை புதிதாக படைத்துக்கொண்டேயிருக்கும். தொடர்ச்சியாக முன்னேறும். தன் விடுதலையை, சுதந்திரத்தை, இறைமையை நிச்சயம் வென்று கொள்ளும்.

அப்போது, நாம் சர்வதேச அரங்கில் பெருமையுடன் அறிவிப்போம்:

எமது தலைநகரம் உண்மையான சமாதான நகரம் என்று!

வெற்றி பெற்றுள்ள மாபெரும் விடுதலைப்போராட்டத்தின் மங்கா நினைவுச்சின்னம் என்று!

★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

www.thamileelam.org
temk@temk.freeserve.co.uk

# புதியதொரு வழி செய்வோம்...!

அன்பானவர்களே, புரட்சிகர வணக்கங்கள் !

ஒக்டோபர்மாதம் நமது தேசத்திற்கு சில வரலாற்றுப் பதிவுகளை நினைவூட்டும்மாதமாகும். 1987 ஒக்டோபரில்தான்நமது தேசம் இந்திய ஆக்கிரமிப்பாளருக்கெதிராக ஆர்ப்பரித்தெழுந்த மாதமாகும். இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை நமது தமிழீழ மண்ணில் தோற்கடித்த வெற்றியை தேசமாக நினைவு கூறும் இத்தருணத்தில் தேசத்தின் இறைமையை பாதுகாப்பதற்காக போராடி மடிந்த போராளிகளதும் ஆக்கிரமிப்பாளர்களால் படுகொலைசெய்யப்பட்ட எமது மக்களதும் தியாகத்தை நினைவிற்கொள்வோம். அவர்களுக்கு எமது உயர்வான அஞ்சலிகளை சமர்ப்பிப்போம். நமது பிராந்திய அரசியலில் இந்திய ஆக்கிரமிப்பை வீரமுடன் முறியடித்திருக்கும் தேசம் எனும் வகையில் நமது தேசமும் விடுதலைப் போராட்டமும் புதிய வரலாற்றை, புதிய படிப்பினைகளை பிராந்திய அரசியல் வரலாற்றில் பதித்துள்ளது என்பதில் பெருமிதங்கொள்வோம்.

அதே நேரம் வரலாற்றில் ஈழத்தமிழ் தேசம் உலகின் முன் தலைகுனிந்த மாதமுமாய் ஒக்டோபர் மாதமுள்ளது. ஆம், 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஈழத்தமிழ் தேசத்தினரான நாம் சக தேசமான முஸ்லிம் தேசத்தின் தேசிய வாழ்வை சிதைத்திடும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டோம். தமிழ் தேசத்தின் விடுதலையின் பெயரால்தமிழீழத்தை தமது தாயகமாகக் கொண்ட முஸ்லிம் மக்கள் தமது மண்ணிலிருந்து எம்மால் துரத்தியடிக்கப்பட்டனர். சகோதர தேசத்தின் மீதான இவ் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு தமிழ்த தேசத்தினரான நாம் தேசமாக முழுமையாக பொறுப்பேற்பதுடன் நமது அரசியல், சித்தாந்த தவறுகளை திருத்திக்கொள்ளவும் வேண்டிய நிலையிலுள்ளோம். தமிழீழ முஸ்லிம் மக்கள் தமது தாயகத்தில் தாம் விரும்பியவாறு வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது தமிழ் தேசத்தையேச் சாரும். இதற்கு முன்னிபந்தனையாக ஈழத்தமிழர் தேசிய அரசியல் ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டும். இதன்மூலமே நமது தேசியத்தவறுகளைக் களையவும் சகோதர தேசங்களுடனான உறவில் சமத்துவத்தைப் பேணவும் முடியும். இப்பாரிய வரலாற்றுக் கடமையை நிறைவேற்றும் பொறுப்பு தமிழ் மக்களினதும் தமிழ்த்தேசத்தின் புரட்சிகர, முற்போக்கு, ஜனநாயக பிரிவினரினரான நமது கைகளிலுமே உள்ளது.

முஸ்லிம் மற்றும் சிங்கள பொது மக்கள் மீது இரக்கமற்று மேற்கொள்ளப்படும் படுகொலைகள் தமிழீழ விடுதலைப் போராட்டம் அடிப்படை மனித நேயத்திலிருந்து விலகிச் செல்வதையேக் காட்டுகிறது. இப்போக்கு தொடர்ந்தும் அனுமதிக்கப்படுமானால் சொந்த மக்களின் மீதும் இதே மாதிரியான குரூரம் மேற்கொள்ளப்படுவதற்கு அதிக காலமெடுக்காது. சக தேசங்களின் பொது மக்களை மனிதத்தன்மையற்ற விதத்தில் படுகொலை செய்யும் உளவியல் விடுதலைப் போராட்டத்தில் நிலவுவது அதன் அர்த்தத்தில் விடுதலையின் ஜீவ ஊற்றையே நச்சுப்படுத்துவதாகும். இதன் மூலம் கொலைவெறியும் வன்மமும் கொண்ட இளம் போராளிகள் சமூகத்தில் உருவாவது மாத்திரமல்ல, ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் தனது ஜனநாயக மூலத்தையே இழப்பதற்கே இது இட்டுச் செல்லும்.

நமது மக்களினதும் போராளிகளினதும் விலைமதிப்பற்ற உயிர்த் தியாகங்களாலும் சாதனைகளாலும் தனது விடுதலையுணர்வை - சுயநிர்ணய உரிமையை உலகிற்கு அறிவித்து நிற்கும் நமது தேசத்தின் விடுதலைப் போராட்ட அரசியலை செழுமைபடுத்துவோம். நமது தேசத்தை அழித்தொழிக்கும் எதிரிக்கு எதிராக மாத்திரமல்ல, நமது விடுதலைப் போராட்டத்தில் கருக்கொண்டு வரும் மானுடத் தன்மையற்ற போக்கிற்கெதிராகவும் போராடுவோம்.

புரட்சிகர ஆர்வளர்களே! ஜனநாயக சிந்தனையாளர்களே! முற்போக்கு உணர்வுடையவர்களே! உழைக்கும் மக்களே! பெண்களே! இளைஞர்களே! மாணவர்களே! இலக்கியவாதிகளே!... எழுக!! தேசத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பை நம் வலிய கரங்களில் எடுக்க ஒன்றிணைக!!!

ஆசிரியர் குழு
15. 10. 99

## மக்கள் களம்

1) ஒரு பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் என்பது மிகவும் முக்கியமானது. தங்களது பத்திரிகையில் முதலாவது இதழின் பின் வந்த ஆசிரியர் தலையங்கம் பொதுவானதாகவே எழுதப்படுகின்றது. குறிப்பானதாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் எதுவும் அதில் காணமுடிவதில்லையே. ஏன்?என்ன செய்வது என்று தங்களுக்கு தெரியவில்லையோ?நீங்கள் இன்னுமொரு ஈரோஸா? அப்படி என்றால் நீங்கள் வேண்டாம். இருப்பவர்களே போதும். தங்களது செயற்பாட்டைப்பார்க்கும் பொழுது அவ்வாறுதான் தெரிகின்றது.

யவனன் - கனடா

2) பீடை ஒழிந்தது. மாணிக்கதாசன் பீடையே தான். அதில் எனக்கு மாற்று கருத்து கிடையாது. ஆனால் மாணிக்கதாசனுடன் இந்த வரலாறு முடிந்து போய் விட்டதா? நீங்கள் மாணிக்கதாசன் போன்றவர்கள் உருவாவதற்கான அரசியல், சமூக காரணங்களை பார்க்க மறுக்கும்வரை தமிழ் தேச விடுதலை போராட்டத்தில் தீர்க்கமானதும் ஆரோக்கியமானதுமான பங்களிப்பை செய்ய மாட்டீர்கள்.

குகன்- லண்டன்

3) இன்று இலங்கையில் நடக்கும் யுத்தம் குறித்து இதுவரையில் நீங்கள் எவ்விதமான நிலைப்பாட்டையும் முன் வைக்கவில்லை. இதற்கு நீங்கள் தந்திரோபாய ரீதியாக தான் பதிலளிக்கவில்லை என்று கூறக்கூடும். ஆனால் இது நீங்கள் சந்தர்ப்பவாதிகளாக இருக்க கூடுமோவென்ற சந்தேகத்தையே கிழப்புகிறது.

மதன்
லண்டன்

4) நீங்கள் தமிழ் தேசம், தேசத்திற்கான விடுதலை என்றெல்லாம் பேசுகிறீர்கள். யார் இந்த தமிழ் மக்கள்? எவ்வகையான விடுதலை என்பது குறித்து இதுவரையில் மூச்சு விடவில்லை. குறைந்த பட்சம் நீங்கள் குறிப்பிடும் தமிழீழ பிரதேசத்தில் வாழும் மக்களிடம் அவர்களுக்கு என்ன தேவையென்றாவது ஜனநாயக பூர்வமாக வினவுவீர்களா? உதாரணமாக கிழக்கு திமோரில் நடந்தது போன்ற பொதுஜன வாக்கெடுப்பு.

முருகேசு - லண்டன்

5) தமிழீழம் இரண்டாவது இதழ்தான் எனக்கு கிடைத்தது. பத்திரிகை வடிவமைப்பு நன்றாயுள்ளது. சின்னம் மிகவும் புரட்சிகரமானதாக உள்ளது. பெண்கள், சிறுவர் கட்டுரைகள் இரண்டும் சமூகத்தில் தாக்கம் நிகழ்த்தும் வகையில் புதிய பார்வையில் புதிய விடயங்களை சுட்டி நிற்கின்றன. தமிழீழ குடியரசில் கூறப்படும் விடயங்கள் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்தும்.

சிவலிங்கம் - யாழ்ப்பாணம்

"எல்லாக் காலங்களிலும் போராடாமல் இருப்பதற்கு பல்வேறு நியாயங்கள் எல்லோருக்கும் இருக்க முடியும். சுதந்திரமடையாமல் இருப்பதற்கும் அது தான் ஒரே வழியும்"

–சேகுவேரா–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்